கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு

## V

**Kerala Reader - Tamil (AT)**

**Standard V**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT),
2016

KT 465-1/Tamil Reader-5 (AT)

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

***Prepared by*** :
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
*First Edition*: 2014, Reprint : 2016
*Type setting*: SCERT Computer Lab

© Government of Kerala • Department of Education

தாய்க்கு நிகரான ஒன்றுதான் தாய்மொழியும். தாயிடம் காட்டும் அன்பும் ஆதரவும் தாய்மொழியிடமும் காட்டவேண்டும்.

தாய்மொழியாம் தமிழ்மொழி காலத்தால் மிகப் பழமையானது; தனிச்சிறப்பு மிக்கது. பழம்பெரும் உலக மொழிகளுக்கு இணையான இலக்கண இலக்கிய வளம் தமிழ்மொழிக்கு உண்டு. தமிழின் அடிப்படை அருமை பெருமைகளைத் தெரிந்துகொள்ளவும் தமிழ்மொழியைப் பல்வேறு நிலைகளில் கையாளுவதற்குரிய திறன்களைப் பெறுவதற்கும் ஏற்ற வண்ணம் இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. வாசித்தும் எழுதியும் சிந்தித்தும் செயல்பட்டும் நாம் அடையவேண்டிய அறிவையும் ஆற்றலையும் திறன்களையும் பெறுவோமாக.

வாழ்த்துகள்,

**முனைவர். பி.ஏ.பாத்திமா**
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

# Textbook Development Committee

## Tamil - V (AT)

### *Members*

Aji Prakash, M.H., GHS, Koovakkadu, Kollam.

Joseph Manoranjan, I., GLPS, Chottupara, Idukki.

Kaleel Rahiman, A., BGHSS, Vannamadai, Palakkad.

Manivannan, C., GTLPS, Chalai, Thiruvananthapuram.

Prabhu, A., GUPS, Karimtharuvi, Idukki.

Raj, S.T., GUPS, Vandiperiyar, Idukki.

Sreenivasan, KKMHS, Vandithavalam, Palakkad.

### *Experts*

Dr. Gomathy Nayagam, E., Guest Lr. University of Madras, Chennai.

Dr. Meeran Pillai, M.M, Prof., (Rtd.), University College, Thiruvananthapuram.

Dr. Nainar. M., Reader., (Rtd.), University College, Thiruvananthapuram.

Dr. Parasuraman, T., Prof., PILC, Pondichery.

Dr. Rajaram, S., Prof.,(Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Ratnasabapathy, P., Prof.(Rtd.), Chennai.

Dr. Veerappan, P., Prof., (Rtd.), NCERT, Mysore.

### *Artists*

Mohanan, J., Spl.Tr., (Rtd.), Nedumangad.

Subin, M.S., Artist, Kollam.

RadhaKrishnan, P., Artist, Neyar Dam, Thiruvananthapuram.

### *Academic Co-ordinator*

Dr. Sahaya Dhas, D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பூங்காவனம் | 7 - 24 |
| | ▶ இனிய சாரலின் எழில் | 8 |
| | ▶ மரமும் மனிதனும் | 10 |
| | ▶ பிறருக்காகவும் வாழ் | 13 |
| 2. | நெஞ்சம் இனிக்கிறது | 25 - 42 |
| | ▶ உழவர்களுக்கு ஒரு திருநாள் | 26 |
| | ▶ பொங்கல் கும்மி | 31 |
| | ▶ அலங்காநல்லூர் அனுபவம் | 33 |
| 3. | அமிழ்தமிழ்து | 43 - 62 |
| | ▶ இலக்கியச் சுவை | 44 |
| | ▶ நல்ல நாடு | 50 |
| | ▶ முல்லைக்குத் தேர் | 57 |
| 4. | நலம் விரும்புவோம் | 63 - 78 |
| | ▶ பட்டாம் பூச்சிகள் | 64 |
| | ▶ சாதனை நாயகி | 68 |
| | ▶ சின்னானும் சிட்டுக் குருவியும் | 70 |
| 5. | உதவும் கரங்கள் | 79 - 93 |
| | ▶ அன்னை தெரேசா | 80 |
| | ▶ கருணை உள்ளம் | 83 |
| | ▶ உயிர்களிடத்து அன்பு வேணும் | 85 |
| | அகரமுதலி | 94 |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பாகம் 4 அ

## இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ  பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலைமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

1

# பூங்காவனம்



‘காடு செழித்தால் நாடு செழிக்கும்’

# இனிய சாரலின் எழில்




குயில் கூவிக் கொண்டிருக்கும்
கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்
வாசம் உடைய நற்
காற்றும் குளிர்ந்திருக்கும்
கண்ணாடி போன்ற நீர்
ஊற்றுக்கள் உண்டு
கனிமரங்கள் மிக உண்டு



பூக்கள் மணம் கமழும்
பூக்கள் தோறும் சென்று தேன்
ஈக்கள் இருந்தபடி
இன்னிசைபாடிக் களிக்கும்
வேட்டுவப் பெண்கள்
விளையாடப் போவதுண்டு
காட்டு மறவர்களும்
காதல்மணம் செய்வதுண்டு!

- பாவேந்தர் பாரதிதாசன்.

## ஆசிரியர் குறிப்பு



இயற்பெயர் : சுப்புரத்தினம்.

பெற்றோர் : கனகசபை, இலக்குமி அம்மாள்

காலம் : 29-04-1891 முதல் 21-04-1964 வரை.

இயற்றிய நூல்கள் : குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலியன.

## செயல்பாடுகள்

**வாசியுங்கள்; சொல்லுங்கள்.**

- காட்டின் அழகைக் கவிஞர் எவ்வாறு வருணிக்கிறார்?

**பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.**

**குழுக்களில் கலந்துரையாடுங்கள்.**

- மரங்களால் நாம் பெறும் பயன்கள் எவை?
- மரங்களை வெட்டுவதால் ஏற்படும் தீமைகள் எவை?
- ஒத்த ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுங்கள்.

மாதிரி : குயில் - மயில்

______ ______

______ ______

______ ______

# மரமும் மனிதனும்

காடுகளின் மிக முக்கியப் பங்காகப் பெரும் அளவில் நம் கண்ணுக்குத் தென்படுவன மரங்கள்தாம். மரங்கள் பல நன்மைகளைத் தருவதால் மரங் களைத் தெய்வங்களாக வழிபட்டனர் முற்கால மக்கள். மரம் மனிதனுக்கு உணவளித்தது. மரத்தின் இலைகள் ஆதிகால மனிதனின் ஆடையாகப் பயன்பட்டன. வீட்டின் தேவைகளுக்கு வேண்டிய பொருட்களைச் செய்ய மரம் பயன்பட்டது. அக்காலத்தில் ஊர்ப் பஞ்சாயத்து, மக்கள் சபை போன்ற கூட்டங்கள் மரத்தடியிலேயே நடத்தப்பட்டன.



எந்த மரத்தையும் மனிதன் அழித்து விடக் கூடாது என்ற எண்ணத் தில் மரங்களில் இறைவன் உறைவதாகப் பழங்கால மக்கள் நம்பினர்.

“இறைவா, திருவேங்கட மலையில் நான் ஒரு செண்பக மரமாகப் பிறக்க வேண்டும்” என்று குலசேகர ஆழ்வார் எம்பெருமானை நோக்கி வேண்டுகின்றார், சங்க இலக்கியங்களில் மரங்கள் சில கட வுளின் மரங்களாகக் கூறப்பட்டுள்ளன. புன்னை மரத்தில் கடவுள் வாழ்வதாக நற்றிணை கூறுகிறது. ஆலமரம் ‘கடவுள் மரம்’ என்று அகநானூறு, புறநானூறு, நற்றிணை மொழிகின்றன. வேப்பமரம் அம் மனின் மரமாகக் கருதப்படுகிறது. தமிழகத்தில் விழாக்கள் கொண்டாடும்பொழுது மஞ்சள், வேப்பிலை, மாவிலை இவற்றைத் தோரணங் களாகக் கட்டுவர், உடலிலும் கட்டிக்கொள்வர்.

நல்ல காய்கனிகள் தரும் மரங்களையும், நறுமணம் கமழும் மலர்களைத் தரும் மரங்களையும் வீடுகளிலும் சாலை ஓரங்களிலும் வளர்க்க வேண்டும். மரம் மனிதனின் அன்றாட வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளது

## செயல்பாடுகள்

**படத்தைப் பார்த்து ஒவ்வொரு குழுவும் கதை தயாரித்து வகுப்பில் சொல்லட்டும்.**



**காடுகளை அழிப்பதால் ஏற்படும் தீங்குகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கான சுவரொட்டி, முத்திரை வாக்கியம், துண்டுப் பிரசுரம் போன்றவற்றைக் குழுக்களில் தயாரியுங்கள்.**

வாசகம் உருவாக்க உதவும் எதுகை - மோனை வார்த்தைகள் சில...

மரம், வரம், பயிர், உயிர், மண், விண், பொன், கண், மழை, பிழை, தழை, விலை, விளை, தலை, பசுமை, அருமை, வனம், தனம்

உதாரணம் :
- மரம் வெட்டாதே! இயற்கைத் தாயின்
  கரம் வெட்டாதே!
- காடு கமழும் சோலை வனம்! - அதை அழித்தால்
  நாடு ஆகுமே பாலைவனம்!

மரம் வளர்த்தலை ஊக்குவிக்கும் பொருட்டு பசுமை மன்றத்தில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுக் குறிப்புத் தயாராக்குங்கள். சொற்பொழிவாற்றுங்கள்.

வாசித்தறிய.

**காடுகள்...**

மழை தரும், மண்சரிவு, நில அரிப்பைத் தடுக்கும், நிலத்தடி நீரைப் பாதுகாக்கும். கார்பன்-டை-ஆக்ஸைடை உறிஞ்சி உயிர் வாயுவான ஆக்ஸிஜனை வெளியிடுகிறது. புவியின் தட்ப வெப்பம் காடுகளால் தீர்மானிக்கப்படு கிறது. ஓசோன் ஓட்டை, அமில மழை, கடல் அரிப்பு, புவி வெப்பமாதல், பருவநிலை மாறுபாடு, வறட்சி போன்ற சூழலியல் பிரச்சினைகளுக்குக் காடு வளர்ப்பு தீர்வு தரும்.

# பிறருக்காகவும் வாழ்

மரக்கன்றுகள் நடுவதைப் புனிதமான பணியாகக் கருதுபவர்கள் உண்டு. அப்படிப்பட்ட முதியவர் ஒருநாள் மரக்கன்று நட்டுக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த இளைஞன் ஒருவன் கேட்டான் "இந்த மரக்கன்று வளர்ந்து பயன் தருவதற்கு இன்னும் இருபது வருடங்களாவது ஆகுமே. உங்களுக்கோ மிகவும் வயதாகிவிட்டதே. இந்த மரம் வளர்ந்து காய்த்துப் பழம் தருவதை அனுபவிப்பதற்கு நீங்கள் இருப்பீர்களா தாத்தா! பிறகு எதற்காக வீணாய் இப்படிச் சிரமப்படுகிறீர்கள்?"



அதற்கு அந்த முதியவர் சற்றுத் தூரத்தில் பழங்கள் பழுத்துத் தொங்கும் பெரிய மரத்தைக் காட்டிச் சொன்னார் "தம்பி நான் சிறுவனாக இருக்கும் போது அதோ, அந்த மரத்தை ஒருவர் நட்டு வளர்த்தார். அவரும் அந்த மரத்தின் பலனை அனுபவிக்கவில்லை. ஆனால் நான் அம்மரத்தின் கனிகளைத் தின்றிருக்கிறேன். இப்போது நான் நடுகிற இந்தக் கன்று, மரமாகிக் காய்க்கும்போது வேறு யாருக்காவது பயன்படும். அந்த மரத்தில் நான் கனி உண்டதற்கான நன்றிக்கடனை, இந்த மரக்கன்றை நடுவதன் மூலம் செலுத்துகிறேன். நாம் வாழும் காலத்தில் இந்தச் சமூகத்திலிருந்து நிறையப் பெற்றுக் கொள்ளுகிறோம். அதற்குப் பதிலாக நாம் இந்தச் சமூகத்திற்கு என்ன செய்கிறோம்?"



இளைஞன் யோசித்து நின்றான். முதியவர் தொடர்ந்து சொன்னார்; "நம்மைப் பற்றி மட்டுமே எப்போதும் சிந்தித்து, நமக்காக மட்டும் வாழ்வது நல்ல வாழ்க்கை ஆகாது. நம்முடன் வாழ்பவர்களுக்காகவும், நமக்குப்பின் வருபவர்களுக்காகவும் நம்மால் முடிந்த அளவு நாம் செய்யும் நன்மைகள்தான் நம் வாழ்க்கையை முழுமையடையச் செய்கின்றன. நாம் மற்றவர்களைக் குறித்து அக்கறை கொள்ளும்போதுதான் இந்தச் சமூகம் மேம்பட்ட சமூகமாக மாறும்".

அவர் சொன்னதை மனப்பூர்வமாக உணர்ந்த இளைஞன், மரக்கன்று நடுவதில் அவருக்கு உதவி செய்தான்.

**செயல்பாடுகள்**

- **இக்கதையிலிருந்து நீங்கள் தெரிந்துகொண்டது என்ன? குழுக்களில் கலந்துரையாடுங்கள்; எழுதுங்கள்.**
- **உங்கள் பள்ளிப் 'பசுமைமன்றத் தொடக்க விழா'விற்கு அழைப்பிதழ் தயாரியுங்கள்.**

## *செடி வச்சா மழை பெய்யும்*



"நான் மழலை வகுப்புப் படிக்கிறப்ப பள்ளியில் ஒரு செடியைக் கொடுத்தாங்க. வீட்டுக்குக் கொண்டு வந்தேன். 'ஏம்மா இந்தச் செடிய எங்கிட்ட தந்தாங்க?' என்று அம்மாவிடம் கேட்டேன். 'செடி நட்டுவச்சா, மரமா வளர்ந்தவுடனே மழை பெய்யும்; மழை பெய்தால் பூமி மகிழ்ச்சியடையும். பூமி மகிழ்ச்சியடைந்தால்தான் நாம மகிழ்ச்சியா இருக்க முடியும்' என்று சொன்னார். அம்மா சொல்லித்தந்த முதல்

பாடம் தான் என்னுடைய இந்தப் பணிக்குத் தூண்டுகோலாக இருந்தது. இதுவரை 5000 செடிகளை மற்றவர்களுக்குக் கொடுத்திருக்கேன்" என்று சொல்லி வியக்க வைக்கிறான் குருவிஷ்ணு.

சிதம்பரத்திலுள்ள எடிசன் ஜி. அகோரம் நினைவுப் பள்ளியில் 5 ஆம் வகுப்புப் படிக்கிறான் குருவிஷ்ணு. இவனது சாதனையைப் பாராட்டி சான்



ஃப்ரான்சிஸ்கோவிலுள்ள 'ஆக்ஷன் ஃபார் நேச்சர்' என்கிற அமைப்பு 2011 ஆம் ஆண்டிற்கான 'யங் எக்கோ ஹீரோ' என்ற விருதை அவனுக்கு வழங்கியுள்ளது.

குரு விஷ்ணுவுக்கு இந்த விருது சுலபமாகக் கிடைக்க வில்லை. சுற்றியுள்ள பல ஊர்களுக்கும் சென்று 30 பள்ளிகளிலும், 5 கல்லூரிகளிலும் மரம் நடுவதன் நன்மைகளை விளக்கிப் பேசியிருக்கிறான். இதற்காகச் சுமார் 25.000 மக்களைச் சந்தித்து இருக்கிறான். கடந்த மூன்று ஆண்டுகளில் மாணவர்களிடமும் பொதுமக்களிடமும் 5000 செடிகளைக் கொடுத்து அவர்களையும் இந்தப் பணியில் ஈடுபடுத்தியுள்ளான்.

இளம் சுற்றுச்சூழல் வீரர் விருதைத் தவிர, 'இளம் சுற்றுச்சூழல் ஆர்வலர், சுற்றுச்சூழல் காவலர்' போன்ற விருதுகளையும் பெற்றுள்ளான். 'சரி, 5000 செடிகளை வாங்கப் பணம் ஏது?' என்று கேட்டால்...

'நான் நல்லா கீபோர்டு வாசிப்பேன். கோயில் விழாக்களில் இசை நிகழ்ச்சி நடத்தி அதன் மூலம் வரும் வருமானத்தில் செடிகள் வாங்குவேன்' என்கிறான் குருவிஷ்ணு. தனது ஒவ்வொரு பிறந்த நாளின்போதும், பள்ளியில் ஒரு மரக்கன்று நடுவதை அவன் வழக்கமாகக் கொண்டுள்ளான்.



"நான் எல்லாரிடமும் கேட்டுக்கொள்வது... குறைந்தது உங்கள் பிறந்த நாளுக்காவது ஒரு மரம் நடுங்கள், மரங்களை வெட்டாதீங்க. ஒரு மரத்தை வெட்டினால் பத்து மரம் நடுங்கள். பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்தாதீங்க. துணிப்பைகளையே பயன்படுத்துங்கள். பட்டாசைக் கொளுத்தி வீணாக்கிறதைவிட அந்தப் பணத்தை 'மரம் நடுவதற்கு'க் கொடுங்க" என்று சொல்கிறான்.

இந்தச் சிறு வயதிலேயே அவனது சமூகச் சிந்தனையைக் கண்டு நமக்குப் பிரமிப்பு! ஆனால் குரு விஷ்ணுவோ மிகச் சாதாரணமாக இருக்கிறான்.

"உலகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் 'கோடி கோடி மரம்' நட வேண்டும் என்ற இலக்கில்... என்னோட பங்களிப்பாக லட்சம் மரம் நடும் முயற்சியில் இறங்கி இருக்கேன். அதைச் செய்வேன்" என்றும் சொல்லி வியக்கவைக்கிறான்.

## செயல்பாடுகள்

உங்கள் பகுதியில் மரங்கள் நடுவதற்கு என்னென்ன செய்வீர்கள்? குழுக்களில் கலந்துரையாடுங்கள், சொல்லுங்கள்.

இலைகளில் இதுபோன்ற வடிவங்களை வெட்டி வகுப்பறையில் வெளியிடுங்கள்.





வாழை மரத்திற்கு ஏற்ற வண்ணம் தீட்டுங்கள்.



இதைப் போன்று ஒரு வாழை மரத்தை வெள்ளைச் சார்ட்டில் வரைந்து வண்ணம் தீட்டி ஒவ்வொரு இலையிலும் வாழையின் பயன்களை எழுதி வகுப்பறையில் வெளியிடுங்கள்.

## சொல் ஒன்று பொருள் இரண்டு :

- கனி மரங்கள் மிக உண்டு.
  மரங்களின் கனிகளை உண்டு வாழலாம்.
- பூங்குழலி மாலை சூடினாள்.
  எழிலன் மாலை வருவான்.

(ஞாயிறு, நூல் என்னும் சொற்களைப் பயன்படுத்தி இதுபோல் எழுதுங்கள்)

## கற்பனை செய்யுங்கள்; கவிதையை முழுமையாக்குங்கள்.

கானகத்தில் சென்று நாம்
கருங்குயிலைக் காணலாம்.
ஆட்டம்போடும் மயிலையே
அழகாக ரசிக்கலாம்!

______________________

______________________

______________________

______________________

## இவ்வருடம் பள்ளிக்கூடத்தில் உங்களுக்குக் கிடைத்த மரத்தின் வளர்ச்சியைப் பற்றி எழுதுங்கள்.

## வழு - வழாநிலை - வழுவமைதி

பள்ளி மாணவன் பார்த்திபன் கடைத்தெருவுக்குச் சென்றான். சாலையில் ஒரு காளைவண்டி வந்து கொண்டிருந்தது. வண்டிக்காரர், மாடுகளைப் 'பார்த்து சாலையைப் பார்த்து ஓடுங்கடா ராஜா! என் செல்லங்களா! கொஞ்சம் வேகமாய் போங்கடா!' என்று விரட்டினார். இதைப் பார்த்திபன் கேட்டான்.

சிறிது தூரத்தில், ஒரு நாய்க்குட்டியோடு ஒரு பெண் வந்து கொண்டிருந் தாள். அப்பெண், 'ஜிம்மி! இங்கே வாம்மா! என்கையில் உனக்குப் பிடித்த பிஸ்கட்! வாம்மா செல்லம்!' என்று ஒரு சிறுமியைக் கூப்பிடுவது போல் நாய்க் குட்டியைப் கூப்பிட்டாள். இதையும் பார்த்திபன் கவனித்தான்.

வீட்டுக்குப் போய், தமிழ் ஆசிரியையான தன் அம்மாவிடம் சாலையில் தான் கண்டதையும் கேட்டதையும் கூறினான். என்னம்மா! மாடுகளை, பையன்களைக் கூறுவதுபோல் வாடா! போடா என்கிறார் வண்டிக்காரர். நாய்க்குட்டியைப் பெண் குழந்தையை அழைப்பதுபோல் இங்கே வாம்மா! என்கிறார் ஒரு பெண். இவையெல்லாம் தப்பு இல்லையா அம்மா? அதைக் கேட்ட அம்மா, தவறுதான். "நான்கூட உன்னை, பார்த்திக்கண்ணு இங்கே வாம்மா! செல்லமே! இங்கே வாம்மா! என்று சிலசமயம் கூப்பிடுவேன் இல்லையா? இதுவும் தப்பு தான்! ஆண்பாலைப் பெண்பால் ஆக்கிவிட் டேன்! அல்லவா?

ஏன், நீ கூட, நேற்றுப் பள்ளிக்கூடம் போகுமுன், உன்னைக் கூப்பிட வந்த சோமுவிடம் டேய்! டேய்! இருடா! நானும் வந்துட்டேன்" என்று கூறுகிறாயே. அது மட்டும் தப்பு இல்லையா? அது எப்படி அம்மா தப்பு?

"சோமு! இரு நானும் வருவேன்" என்று எதிர்காலத்தில் கூறவேண்டியதை வந்துட்டேன் என்று, இறந்தகாலத்தில் கூறினாய் அல்லவா? அதுதான் தவறு!

"நான் அவசரத்தில் அப்படிக் கூறினேன் அம்மா!" என்றான் பார்த்திபன்.

நீ சொல்வது சரிதான் பார்த்திபா!

இலக்கணமுறைப்படி தவறு இல்லாமல் பேசுவதையும் எழுதுவதையும் "வழாநிலை" என்று இலக்கண நூல் கூறுகிறது.

இலக்கண முறையில்லாமல் பேசுவதை "வழு" என்று கூறுகிறது.

நாம் சற்றுமுன் பேசிக்கொண்டிருந்தோமே. அவையெல்லாம் ஏதேனும் ஒரு காரணம் பற்றி ஏற்பட்ட தவறுகள். அதனால் அவற்றை ஏற்றுக் கொண்டு அவற்றை வழுவமைதி என்று சொல்கிறார்கள்.

அப்படியா! அம்மா! அவற்றைப் பற்றிக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள் அம்மா!

இலக்கண முறைக்கு மாறாகப் பேசுவது, எழுதுவது இரண்டும் "வழு" என்று கூறப்படுகிறது.

நேற்று, கண்ணம்மா ஊரிலிருந்து வந்தது! என்று மாமா கூறினார் இல்லையா! கண்ணம்மா என்ற உயர்திணைப் பெயரை வந்தது என்று அஃறிணையாக முடித்தது திணைவழு என்பார்கள்.

இதேபோல், கண்ணன் வந்தாள் என்று ஆண்பாலை, பெண்பால் ஆக்கி முடிப்பது பால்வழு என்று கூறுவார்கள்.

நீ வந்தான் என்று கூறுவது, முன்னிலைப் பெயரைப் படர்க்கை வினையால் முடித்துக் கூறுவது இடவழு ஆகும்.

குழந்தைகள் சிலர் நாளை வந்தேன் என்று கூறுவதைக் கேட்டிருப்பாய் அல்லவா? இதுபோல் நாளை என்ற எதிர்காலம், வந்தேன் என்ற இறந்த காலத்தோடு மயங்குவது காலவழுவாகும். எட்டுக்கால் பூச்சிக்கு எத்தனை கால்? என்று ஒருவன் கேட்டால் அது வினா வழு. ஏனென்றால் வினா விலேயே விடை உள்ளது அல்லவா?

கொட்டைப் பாக்கு என்ன விலை? என்ற வினாவுக்கு, பட்டுக்கோட்டை பத்துகிலோமீட்டர் என்று கூறினால் அது விடை வழு என்று கூறுவார்கள். ஏனென்றால் வினாவுக்கு ஏற்ற விடை சொல்லவில்லை. இல்லையா? அடுத்து மற்றொன்று "எங்கள் வீட்டுப்பசு ஒரு குட்டி போட்டது" என்று கூறினால் அது மரபு வழு. "பசு கன்று ஈன்றது" என்பதுதான் மரபு. தெரிந்ததா. பார்த்திபா! இதுவரை என்னென்ன வழுக்கள் கூறினேன். தொகுத்துச் சொல் என்றாள் அம்மா.

திணை வழு, பால் வழு, இடவழு, காலவழு, வினாவழு, விடைவழு, மரபு வழு. சரிதானே அம்மா என்றான் பார்த்திபன்.

சரியாகச் சொல்லிவிட்டாய் பார்த்திபா! என்றாள் அம்மா.

அம்மா வழாநிலை என்று சொன்னீர்களே! அது என்ன அம்மா? என்றான் பார்த்திபன்.

இலக்கணப்படி, தவறாக இருந்தாலும் மகிழ்ச்சி, உவப்பு, உயர்வு, சிறப்பு, சினம் காரணமாகச் சொல்லப்பட்டால் அவற்றை ஏற்றுக் கொள்கிறோம். இதனை, வழுவமைதி என்பார்கள்.

அப்படியா அம்மா! வண்டிக்காரர் மாடுகளை மகிழ்ச்சி/உவப்பு காரணமாக ஆண்பால்போல் அழைத்தார். பெண்மணி நாயைப் பெண்போல அழைத்தார். அவ்வாறு அழைத்ததற்கு மகிழ்ச்சி காரணம்.

தாங்கள் என்னை, "பார்த்தி, வாம்மா என்றது சிறப்புக் காரணம். நான், விரைவு காரணமாக 'வருவேன்' என்று கூறாமல், 'வந்துவிட்டேன்' என்றேன். இவையெல்லாம் வழு அமைதிகள்.

அதைக்கேட்ட பார்த்திபனின் அம்மா, நன்றாகச் சொன்னாய்! என்று பாராட்டினாள். மேலும், "உன் அப்பா, தன்னைப் பற்றி அடுத்தவர்களிடம் கூறும்பொழுது இந்த ராஜன் ஒரு நாளும் பொய் கூற மாட்டான்' என்று தன்மையைப் படர்க்கையிடமாகக் கூறுவது இடவழுவமைதியாகும்.

"நீ, வருவேன் என்று கூறாமல் வந்துவிட்டேன்" என்று கூறியது காலவழு. ஆனால் விரைவு காரணமாகக் கூறியதால் கால வழுவமைதி ஆயிற்று.

தேர்வு எழுதும் ஒரு மாணவன் வினாத்தாளைப் பார்த்தவுடனே, அது எளிமையாக இருந்த காரணத்தால் நான், "தேர்வில் தேர்ச்சி பெற்று விடுவேன்" என்று கூறுவதற்குப் பதிலாகத் தெளிவு காரணமாக "நான் தேர்ச்சி அடைந்துவிட்டேன்" என்று கூறுவதும் காலவழுவமைதி ஆகும்.

மகாகவி பாரதியார் தம் பாட்டில், "கத்தும் குயிலோசை என்றன் காதில் விழவேண்டும்" என்று பாடுகிறார். குயில் கூவும்; கத்தாது. கூவும் என்று பாடாமல், கத்தும் என்று கூறுவது மரபு வழு. ஆனால் கூறியவர் மகாகவி பாரதியார் ஆதலால், அது மரபுவழுவமைதி ஆயிற்று என்று அம்மா கூறியவுடன்,

மிகவும் மகிழ்ச்சி அம்மா. வழு - வழாநிலை - வழுவமைதி பற்றி விளக்கமாகத் தெரிந்து கொண்டேன் என்று பார்த்திபன் கூறினான்.

**எங்கள் அம்மா**

எங்கள் அம்மா இனியவள்

        என்றும் அன்பு தருபவள்

தங்கக் குணம் கொண்டவள்

        தயக்கம் இன்றிச் சொல்லுவேன்

பஞ்சு போலத் தூயதாய்

        பண்பு நலம் கொண்டவள்

கொஞ்சிக் கொஞ்சிப் பேசியே

        குழந்தை எம்மைப் பேணுவாள்

பண்டம் பலவும் ஆக்கியே

        பங்கு வைத்துத் தருபவள்

கண்டதில்லை அவளைப் போல்

        கனிவு மிக்க கடவுளை

பந்து கோலி பம்பரம்

        பாண்டி ஆட்டம் ஆடிட

எந்த நேரம் சரியென

        எமக்குச் சொல்லித் தந்தவள்

தம்பி தங்கை இருவரும்

        தாய்க்குத் தருவர் தொல்லைகள்

வம்பு செய்த போதிலும்

        வாரி அணைத்து மகிழ்வாளே

நன்று தீது எவையென

        நாளும் எமக்கு ஊட்டுவாள்

என்றும் வாழ்வில் உயரவே

        இனிய நெறிகள் காட்டுவாள்!

குழந்தைகளே, இந்தப் பாடலை இசையுடன் பாடுங்கள்.

இப்பாடலிலிருந்து இரண்டாம் எழுத்து ஒன்றேபோல் அமைந்த சொற்களை எடுத்துக் காட்டுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| மாணாக்கர் : | எங்கள் | பஞ்சு | பண்டம் |
| | தங்க | கொஞ்சி | கண்ட |
| | பந்து | தம்பி | நன்று |
| | எந்த | வம்பு | என்றும் |

ஆசிரியர் : கங, சஞ, டண, தந, பம, றன – இந்த எழுத்துகள், பிறக்கின்ற இடம், ஒலிப்பதற்கான முயற்சி, ஒலி அளவு முதலான காரணங்களால் ஒத்தவை. அதனால் இவற்றை ஓர் இனம் என்று கூறுவர். வல்லினம் ஆறனுக்கும் மெல்லினம் ஆறும் இனம். இடையினம் யாவும் ஒரே இனம்.


இவ்வாறு வருவனவற்றை இன எழுத்துகள் என்பதை அறிந்து கொள்க.

## நான் கற்றுக்கொண்டவை.

| துணைக் கருத்துகள் | மிகநன்றாக | நன்றாக | ஓரளவு |
|---|---|---|---|
| பாடலை இசையோடு பாடினேன். | | | |
| கருத்துகளைச் சொந்தநடையில் எழுதினேன். | | | |
| என்னால் கதை உருவாக்க முடிந்தது. | | | |
| கதையை வாசித்துக் கருத்தைப் புரிந்துகொண்டேன். | | | |
| குழுச் செயல்பாடுகளில் எனது கருத்தைப் பகிர்ந்துகொண்டேன். | | | |
| படம் வரைந்து வண்ணம் தீட்டினேன். | | | |

2

# நெஞ்சம் இனிக்கிறது




"தை பிறந்தால் வழி பிறக்கும்"

# உழவர்களுக்கு ஒரு திருநாள்

'தமிழர் திருநாள்' என்று கொண்டாடப்படும் பொங்கல் விழா தமிழர்களின் பண்டிகைகளில் மிக முக்கியமானது. இது தமிழர்களின் தலை சிறந்த பண்பாடாகிய 'செய்ந்நன்றி அறிதலைக்' காட்டும் அடையாளமாகக் கொண்டாடப்படுகிறது.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற பெருமைக்குரிய உழவர்களின் சிறப்பினை உலகிற்கு உணர்த்துவதாகத் தோன்றிய விழா என்றாலும், மனிதன் உயிர்வாழத் தேவையான உணவினை உற்பத்தி செய்வதற்குக் காரணமான சூரியன், மாடுகள் என்று இவற்றையும் இவ்விழா சிறப்பிக்கிறது. தமிழர்களின் வழிபாடு இயற்கையை ஒட்டியே தோன்றியது ஆகும்.




பொங்கல் திருநாள் நான்கு நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அது முறையே போகிப் பொங்கல், பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும்பொங்கல் என்பனவாகும்.


மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று காலை விடியலிலேயே, வீட்டைத் தூய்மைப் படுத்தும்போது ஒதுக்கப்பட்ட பழைய பொருட்கள் வீட்டின் வாசலில் எரிக்கப் படும். "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பதே இதன் நோக்கம்.

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பதனை ஒட்டித் தை மாதத்தின் முதல் நாள் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. வீட்டின் முற்றத்தில் கோலமிட்டு அடுப்புக் கூட்டி, புதிய பானை, புது அரிசி, வெல்லம் வைத்துப் பொங்கலிடுவர். பானையின் அருகில் கரும்பு, மஞ்சள் ஆகியவற்றை நட்டுவைப்பர். சூரிய உதயத்தில் பொங்கலிட்டுப் பால் பொங்கி வழியும் தருணத்தில் அனைவரும் சேர்ந்து “பொங்கலோ பொங்கல்” என்று முழக்கமிட்டு மகிழ்வர்.

பொங்கல் தயாரானவுடன் வெற்றிலை, பாக்கு, பழம் அனைத்தும் படைத்து விளக்கேற்றிச் சூரியனை வழிபடுவார்கள்.

பொங்கல் திருநாளைத் தொடர்ந்து இரண்டாம் நாள் “மாட்டுப் பொங்கல்” கொண்டாடப்படுகிறது. உழவின் முக்கியத் தோழனான மாடுகளை





நன்றியோடு வணங்குவதே இதன் பொருளாகும். அன்று மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் பூசி, திலகமிட்டு, மாலையிட்டு, பொங்கல் படைத்து மகிழ்வர்.

தைமாதம் மூன்றாம் நாள் "காணும் பொங்கல்" கொண்டாடப்படுகிறது. இந்த நாளைக் 'கன்னிப் பொங்கல்', 'சிறுவீட்டுப் பொங்கல்' என்றும் கூறுவர்.

சாதி, மத, இனத்திற்கு அப்பாற்பட்டு உழைப்பின் உயர்வை உலகத்திற்கு எடுத்துக்காட்டித் தமிழர்தம் நன்றியுணர்வை அனைவரும் அறிந்திடக் கொண்டாடுவதே பொங்கல் திருநாள். இவ்விழாவை நாம் கொண்டாடித் தமிழர்தம் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாப்போமாக.

– ஸ்ரீபா

**செயல்பாடுகள்**


- **நீங்கள் கொண்டாடும் வேறு விழாக்களைப் பற்றிக் குறிப்புத் தயாரியுங்கள்.**
- **பொங்கல் விழாவின் வகைகளை விளக்கமாகக் கூறுங்கள்.**
- **பொங்கல் விழா எவற்றையெல்லாம் சிறப்பிக்கிறது?**

## *வாழ்வின் சுவை*

தங்கச்சி! உடன் பிறப்பே! கொஞ்சம் நில்லம்மா! நான் சொல்வதைக் கேட்டுச் செல்லம்மா! நான்தான் கரும்பு. 'கரும்பு ருசியாக இருந்தால் வேரோடு தோண்டுவதா?' என்னும் பழமொழியே என்னை யாரென்று காட்டும்.

என்னை முதன் முதலில் பயிரிட்டவர்கள் சோழ மன்னர்கள். நான் இன்று உலகெங்கும் வாழ்ந்து வளர்ந்து வருகின்றேன். சுமத்திரா, ஜாவா முதலிய தீவுகளில் என்னை அதிகம் சீராட்டி வளர்க்கின்றனர்.

நான், புன்செய்த் திடல்களிலும் நன்செய் வயல்களிலும் நடப்படுகிறேன்.




இரண்டு மூன்று கணுக் களாக வெட்டப்பட்டு விதைக் கரணை எனப் பெயரிடப்படுகிறேன். வாய்க்கால் வாய்க்காலாக நிலத்தைப் பிரித்து, பண்படுத்தி நீர்பாய்ச்சி என்னை நிலத்தில் நடு கிறார்கள். பத்துப் பன்னிரெண்டு நாட்களில் நான் முளைவிட்டு வளர்வேன். பின் எனக்குப் பாலூட்டுவது போல் முறைநீர் விடு கிறார்கள், உழவர்களே எங்கள் தந்தைகள்; உழத்தியர்களே எங்கள் தாய்மார்கள். எங்கள் எதிரிகள் களைகள். அவற்றை இரு மாதங் களுக்குள் மூன்றுமுறை அகற்றுகிறார்கள், தீய நட்புடன் தாய் தந்தை சேர விடுவார்களா என்ன? உரம் என்னும் உணவூட்டி, நீர் என்னும் பாலூட்டிச் சீராட்டி என்னை என் பெற்றோர் வளர்க்கிறார்கள்.

ஆண்டுப் பயிராக வளரும் நாங்கள் முற்றியபின் சர்க்கரை ஆலைக்கு அனுப்பப்படுகிறோம்

"கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்து நீர்கொளினும் இன்சுவைத்தே ஆகும்!"

எனக் கூறி எங்களைப் பெருமைப்படுத்தி யவர்களுக்கு எங்கள் நன்றி.



கரும்பாலைகளில் எங்களைக் கசக்கிப் பிழிகின்றனர். கொதிக்க வைத்துச் சில இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்படுவதால் எங்களுக்குக் கரும்பு என்னும் பெயர்மாறி, சர்க்கரை என்னும் பெயர் கிடைக்கிறது. இது எங் களுக்கு மறுபிறப்பு. பின்னர் கடைகளுக்கு அனுப்பப்பட்டு விற்பனை செய் யப்படுகிறோம்.

உழவர்கள் சிலர் உலையிலிட்டுக் காய்ச்சி வெல்லம், நாட்டுச் சர்க்கரை தயாரிக்கவும் செய்வர். பொங்கல் நாளன்று நாங்கள் உங்கள் வீடுதேடி வந்துவிடுகிறோம். எங்களைப் போலவே நீங்களும் பிறர்க்காக வாழக் கற்றுக் கொள்ளுங்கள். அதில்தான் வாழ்வின் அதிகச் சுவை அடங்கிக் கிடக்கிறது.

க. கார்த்தீசன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து வினாநிரல் தயாரியுங்கள். அதற்கான விடைகளையும் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- வாழ்வின் சுவை என்ற தன்வரலாற்றைக் கட்டுரையாக எழுதுங்கள்.
- கரும்பைப் பற்றிய பழமொழிகளை, ‘இனிக்கும் மொழிகள்’ என்னும் தலைப்பில் தொகுத்து வெளியிடுங்கள்.

# பொங்கல் கும்மி

கும்மியடி பெண்ணே கும்மியடி-தமிழ்ப்
பொங்கல் திருநாளில் கும்மியடி
இன்மைப் பிணிகள் நீங்கிடவே-எழில்
பொங்கல் பொலிந்திடக் கும்மியடி (கும்மியடி)


காலைக் கதிரவன் உதித்துவரத்-தமிழ்க்
காரிகையர் பற்பல பொங்கலிட
மேலைக் கடலென குரவையொலி-அங்கு
விண்ணைத் துளைத்து ஆர்த்திடவே (கும்மியடி)

மின்னல் ஒளிதரப் புடவைகட்டி-மிளிர்
வண்ண வளையல்கள் குலுங்கிடவே
கன்னல் மொழியென இன்பந்தரும்-தமிழ்க்
கன்னியர் வைகறைப் பொங்கலிட (கும்மியடி)

மஞ்சள் குலைகளும் செங்கரும்பும்-வளம்
மிஞ்சும் கனிகளும் படைத்திடவே
நெஞ்சம் இனிக்கவே குரவைஎழ-மகிழ்
கொஞ்சும் இளங்குயில் பொங்கலிட்டார்.
(கும்மியடி)



பால்பானைப் பொங்கி உயர்ந்துவர - ஒளிர்
பகலவன் கதிர்களால் வாழ்த்துரைக்க
மங்கலப் பானையில் பச்சரிசி - இட்டுவைத்து
பசுமஞ்சள் தோரணம் நட்டுவைத்து (கும்மியடி)



உழைப்பின் உயர்வை உணர்த்திடவே-உயர்
உழவன் பெருமையை ஏத்திடவே
பழமையின் செல்வம் பெருகிடவே
பண்பில் விருந்தைப் போற்றிடவே (கும்மியடி)

மாட்டுக்குப் பொங்கல் படைத்திடுவோம்-நிறை
கூட்டும் இன்பம் பெற்றிடுவோம்
வீட்டுக்கு வந்திடும் எளியவர்க்கும்
இன்பமே கூட்டி அளித்திடவே (கும்மியடி)

நன்றிக்கு வித்தாகும் பொங்கல் விழா
நல்வாழ்க்கை சிறந்திடப் பொங்கல் விழா
மன்றத்தில் வாழ்த்திடும் இன்ப விழா
மனதார வாழ்க வென்று கும்மியடி (கும்மியடி)

**ச. மீனாட்சிநாதன்**

## செயல்பாடுகள்

- **பாடலைக் குழுவாக இசையோடு கும்மியடித்துப் பாடுங்கள்.**
- **இப்பாடலில் வரும் ஒத்த ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுங்கள்.**

நீங்கிடவே, ____________, ______________

____________, ______________, ____________

- **வருணனைச் சொற்களை எழுதுங்கள்.**

காலைக் கதிரவன்

____________________

____________________

____________________

# அலங்காநல்லூர் அனுபவம்

அகிலன் விடுமுறை நாளைக் கொண்டாடுவதற்கு அலங்காநல்லூரிலுள்ள தனது நண்பன் மதன் வீட்டிற்குச் சென்றிருந்தான். அகிலனும் மதனும் விளையாடிக் கொண்டிருக்கும்போது ஒலிபெருக்கியில் ஓர் அறிவிப்பு: "கட்டிளம் காளையர்களுக்கான வீர விளையாட்டு உடனடியாகத் தொடங்க உள்ளது. அனைவரும் மைதானத்திற்கு வாருங்கள்!"

அகிலனும் மதனும் ஆர்வத்தோடு ஓடினர். பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் எனப் பெருந்திரள் அலை அடித்தது. மரக்கிளைகளிலும் வண்டிகளிலுமாக மக்கள் திரண்டிருந்தனர். அகிலனும் மதனும் மக்கள் கூட்டத்தினிடையே நுழைந்து சென்றனர்.



அக்கூட்டத்தில் பெரியவர் ஒருவர் "பிள்ளைகளே" என்றார் உரத்த குரலில். அகிலன், "ஐயா! நாங்களும் விளையாட்டுப் பார்க்க!" என்றான். இந் நெரிசலின் இடையிலும் அகிலன் பெரியவரிடம் இந்த விளையாட்டிற்குத் தனிக் காளைகள் இருக்கின்றனவா? என்றான். இதைக் கேட்டுப் பெரியவர் "தம்பி, இதெல்லாம் சல்லிமாடு" என்றார்.

அகிலனுக்கோ ஆர்வத்தை அடக்க முடியவில்லை. "ஐயா, பெரியவரே! 'சல்லிக்கட்டு' என்றால் என்ன?" என்று கேட்டான்.



KT 465-3/Tamil Reader-5 (AT)

பெரியவரோ' தம்பி 'சல்லி' என்ற பெயருடைய வீரன் ஒருவன் இருந்தான். அவன் பெயராலேயே 'சல்லிக் கட்டு' என்று அறியப்படுவ தாகவும், 'சல்லி' என்பது விழா வின்போது மாட்டின் கழுத் தில் கட்டப்படுகிற வளையத் தினைக் குறிப்பதால் இப் பெயர் வந்ததாகவும் கூறப்படு கிறது என்றார்.



மீண்டும், அகிலன் வெற்றி பெறுபவர் களுக்குப் பரிசு கொடுக்கப்படுமா? என்றான். ஆம் காளையை அடக்கி வருபவர்களுக்குக் கிராமப் பொதுப் பணத்திலிருந்து பரிசுகள் வழங்கப் படுகின்றன என்றார்.

'அகிலா! அதோ பார்! காளைகள் சீறி வருகின்றன' என்றான் மதன்.

மைதானம் எங்கும் மேகமூட்டம் போல் புழுதி பறக்கக் காளைகள் சீறிப் பாய்ந்தன. காளைகளின் கொம்புகளோ நீண்டு கூர்மையாகக் காணப் பட்டன. சிவந்த விழிகொண்ட கூரிய பார்வையுடன் கால்களால் பூமியைப் பிளப்பது போலக் கிளறிக் கொண்டு வீரர்களுக்கிடையே குதித்தன காளைகள். இளைஞர்களும் போர் வீரர்களைப்போல் கச்சையணிந்து, கங் கணம் பூண்டு களம் இறங்கினர். அனைவரும் கோலாகலத்துடனும் ஆர்வத்துடனும் முழக்கமிட்டனர்.

காளைகளை அடக்கும்போது வீரர் சிலருக்குச் சிறு காயங்களும் ஏற்பட்டன. திடீரென்று ஓர் உரத்த குரல் 'அதோ அடக்குகிறான்!'. ஓர் இளைஞன் தாவிக் காளையின் கொம்பைப் பிடித்து, அதனை அடக்கி அதன் கொம்பிலுள்ள 'சண்டி'யை எடுத்தான்.

பார்வையாளர்கள் அவ்விளைஞனை ஆரவாரத்தோடு தோளில் சுமந்து சென்றனர். அவனுக்குப் பரிசும் வழங்கப்பட்டது. அகிலனும் மதனும் சல்லிக்கட்டு விளையாட்டைக் கண்டு ரசித்து மனநிறைவோடு வீடு திரும்பினர்.

## செயல்பாடுகள்

**சல்லிக்கட்டு என்பதற்குப் பெரியவர் அளித்த விளக்கம் என்ன?**

**சொற்றொடர் அமைக்க.** **(மேகமூட்டம், ஆரவாரத்தோடு)**

மாதிரி : சல்லிக்கட்டு விளையாட்டைக் காண மக்கள் <u>பெருந்திரளாக</u> வந்தனர்.

**கீழ் உள்ள கேள்விகளுக்குச் சரியான பதிலைக் கட்டத்தில் அடையாளப்படுத்தவும்.**

1. அகிலன் விடுமுறைக்குச் சென்ற ஊரின் பெயர்.
2. அகிலனின் நண்பன் பெயர்.
3. அவன் கண்டுகளித்த வீரவிளையாட்டு.
4. காளையின் கொம்பில் கட்டப்படும் துணியின் பெயர்.
5. உழவர் திருநாள் எது?
6. சல்லிக்கட்டின்போது காளை வந்து நிற்கும் இடத்தின் பெயர்.
7. பெண்களுக்குக் கூறப்படும் வேறு பெயர்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பொ | ங் | க | ல் | வீ | ஜ | ர | ர் |
| அ | ல | ங் | கா | ந | ல் | லூ | ர் |
| ர | ப | வா | கு | ம | லி | மா | இ |
| ச | ண் | டி | ழ | ய | க் | த | ளை |
| அ | ம | வா | ந் | ப | க | ர் | ஞ |
| உ | த | ச | தை | ரி | ட் | க | ன் |
| பு | ன் | ல் | உ | சு | டு | ள் | ம |

# சிலம்பம்



சிலம்ப விளையாட்டு கம்பு விளையாட்டென்றும், நெற்றிப் பொட்டுக்கம்பு விளையாட்டென்றும், உயிர்ச் சிலம்பு என்றும் பல பெயர்களில் அழைக் கப்படுகிறது. இருப்பினும், சிலம்ப விளையாட்டு என்ற பெயரே பரவலாக வழங்கப்பட்டு வருகிறது.

சிலம்ப விளையாட்டினைப் பயிற்சி நிறைந்த வீரவிளையாட்டென்று கூறலாம். இதற்கான பயிற்சியினைத் தருபவர் சிலம்ப வாத்தியார் என்று அழைக்கப்படுகிறார். இவ்விளையாட்டில் ஈடுபடுவதற்கு நீளமான கம் பொன்று வேண்டும். விளையாடுபவரின் உயரத்திற்கு அளவாய்க் கம்பின் நீளம் இருக்கும். இதற்குப் பெரும்பாலும் மூங்கில் கம்புகளையே பயன் படுத்துவர்.

கம்பு வீசுந்திறன், காலடி எடுத்து வைக்கும் முறை, வேகமாகச் செயல்படும் திறமை இம் மூன்றும் சிலம்ப விளையாட்டின் அடிப்படைக் கூறுகளாக உள்ளன.

விளையாட்டின் துவக்கத்தில் வணக்கம் செலுத்துதல் என்ற முறை உண்டு. முதலில் இறை வணக்கமும் அடுத்து குரு வணக்கமும் இடம்பெறும். போட்டி விளையாட்டாக இருந்தால் எதிர்த்து விளையாடக் கூடியவர்க்கும் வணக்கம் செலுத்துவர். இது தமிழர் விளையாட்டின் சிறப்பு என்று சொல்லலாம்.

எதிரியின் கம்பு உடல் மேல் படாமல் தடுத்தும் தன்னுடைய கம்பினால் எதிரியின் உடலைத் தொடுதலும் ஆகிய செயல்களைக் கொண்டு வெற்றி, தோல்வி நிர்ணயிக்கப்படுகிறது. கம்பின் நுனியில் வண்ணப் பொடியினைத் தடவியிருப்பர். எதிரியின் உடலில் எத்தனை தடவை கம்பின் நுனிபட்டிருக் கிறது என்பதனை வண்ணப்பொடியின் துணைகொண்டு கணக்கிடுவர்.

– இரா. பாலசுப்பிரமணியம்

## செயல்பாடுகள்

- நண்பர்களுக்கு அனுப்ப ஒரு பொங்கல் வாழ்த்து அட்டை தயாரியுங்கள்.

- பொங்கலோடு தொடர்புடைய செய்தித் துணுக்குகள், படங்கள் திரட்டி இலக் கிய இதழில் வெளியிடுங்கள்.



- சல்லிக்கட்டு விளையாட்டோடு தொடர் புடைய படங்களைச் சேகரித்துப் படத் தொகுப்புத் தயாரியுங்கள்.

- அலங்காநல்லூர் சல்லிக்கட்டு நடைபெறும் இடத்தில் வைத்திருந்த சுவரொட்டி அகிலனைக் கவர்ந்தது. தன் பள்ளியில் நடக்கும் ஓண விழாவிற்கு இதைப் போன்று சுவரொட்டி தயாரிக்கத் தீர்மானித் தான். அவனுக்கு உதவுங்கள்.

# தெரிநிலை, குறிப்பு, ஏவல் வினைமுற்றுகள்

(ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகிறார்)

**கண்ணன் பாடினான்**

ஆசிரியர் : குழந்தைகளே! இதை வாசியுங்கள்.

(மாணவர்கள் வாசிக்கிறார்கள்)

ஆசிரியர் : இதில் கண்ணன் என்பது என்ன?

இனியா : பெயர்ச்சொல் ஐயா.

ஆசிரியர் : கண்ணன் என்ன செய்தான்?

சினேகா : பாடினான்.

ஆசிரியர் : பாடினான் என்பது என்ன?

இனியா : கண்ணனுடைய செயல்

ஆசிரியர் : மிக்க சரி

(மீண்டும் ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகிறார்)

**மாடுகள் வயலை உழுதன**

ஆசிரியர் : இதில் மாடுகள் என்பது என்ன?

முருகன் : பெயர்ச்சொல்

ஆசிரியர் : மாடுகள் என்ன செய்தன?

முத்து : வயலை உழுதன.

ஆசிரியர் : உழுதன என்பது என்ன?

முருகன் : மாடுகளின் செயல்

ஆசிரியர் : மிக்க சரி, இவ்வாறு ஒரு பெயர்ச்சொல்லினுடைய செயலைக் குறிப்பது வினைச்சொல் என்று கூறுவர். இப்போது சொல்லுங்கள் வினைச்சொல் என்றால் என்ன?

இனியா : செயலைக் குறிப்பது வினைச்சொல்லாகும்.

ஆசிரியர் : பாடினான் அல்லது உழுதன என்றால் செயல் (வினை) முடிந்துவிட்டது என்று பொருள். சரிதானே?

சினேகா : ஆம், ஐயா!

ஆசிரியர் : இவ்வாறு செயல் முடிவு பெற்றதை உணர்த்தும் சொல் வினைமுற்று என்று வழங்கப்படுகிறது. அவ்வாறானால் பாடினான். உழுதன என்பனவெல்லாம் என்ன?

முருகன் : வினைமுற்றுக்கள் ஐயா!

ஆசிரியர் : இவ்வினைமுற்று இரண்டு வகைப்படும்

(ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்)

**1. தெரிநிலை வினைமுற்று**

**2. குறிப்பு வினைமுற்று**

(மாணவர்கள் வாசிக்கிறார்கள்)

மீண்டும் ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகிறார்.

**'வனைந்தார்'**

ஆசிரியர் : மண்ணால் பானை போன்ற பாத்திரங்கள் செய்தலை வனைதல் என்பார்கள். அதை ஒருவர் செய்தால் வனைந்தார் என்பார்கள். இத்தொழிலைச் செய்வோரைக் குயவர் (மண்பாண்டம் செய்வோர்) என்று கூறுவார்கள்.

(இவ்வாறு விளக்கிவிட்டு)

ஆசிரியர் : யார் வனைந்தார்?

இனியா : குயவர் (செய்பவர்)

ஆசிரியர் : எதனால் செய்தார் ? (கருவி)

சினேகா : மண், நீர், சக்கரம் போன்ற கருவிகளால் செய்தார்.

ஆசிரியர் : எங்குச் செய்தார்? (நிலம்)

இனியா : நிலத்தில் செய்தார்.

ஆசிரியர் : எவ்வாறு செய்தார்? (செயல்)

சினேகா : வனைந்தார்

ஆசிரியர் : எப்போது செய்தார்? (காலம்)

இனியா : நேற்று செய்தார்.

ஆசிரியர் : என்ன செய்தார்? (செய்பொருள்)

சினேகா : மண்பாண்டம் செய்தார்.

ஆசிரியர் : இவ்வாறு செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றை வெளிப்படையாக உணர்த்தும் வினைமுற்று தெரிநிலை வினைமுற்று.

(எடுத்துக்காட்டு : கரும்பலகையில் ஆசிரியர் எழுதுகிறார்.)

திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

(மாணவர்கள் எடுத்துக்காட்டை எழுதிவிட்டு மேற்குறிப்பிட்ட ஆறு வகையின் அடிப்படையில் உள்ளதா என்று எழுதிப் பார்க்கிறார்கள்.)

ஆசிரியர் : முன்பு குறிப்பிட்ட ஆறு வகையின் அடிப்படையில் வெளிப்படையாக எடுத்துக்காட்டி, தொழிலையும் காலத்தையும் குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினைமுற்று எனப்படும்.

முருகன் : கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள் ஐயா.

(ஆசிரியர் ‘அவன் பொன்னன்’ என்று கரும்பலகையில் எழுதுதல்)

ஆசிரியர் : இதில் பொன்னன் என்பது பொன்னை உடையவன் என்று பொருள் தருகிறது. பொன் என்னும் பொருளின் அடிப்படையில் தோன்றி அதனைப் பெற்றிருக்கும் நபரைக் குறிப்பிடுகிறது. இச்சொல் காலத்தை வெளிப்படையாக குறிப்பிடவில்லை. முன்பு பொன்னை உடையான், இன்று பொன்னை உடையவன் என்று ஏதேனும் ஒரு குறிப்பால் தான்

காலத்தை உணர்த்தும். இவ்வாறு வருவதே குறிப்புவினை முற்று.

(ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகிறார்)

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா

உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா"

ஆசிரியர் : பாடலைப் படியுங்கள்

(மாணவர்கள் வாசிக்கிறார்கள்)

ஆசிரியர் : இவ்வாறு தன் முன்னால் உள்ளவரைப் பார்த்து ஏவுதல் (கட்டளையிடுதல்) பொருளில் வரும் வினைமுற்றை ஏவல் வினைமுற்று என்பர். புரிகிறதா?

மாணவர்கள் : புரிகிறது ஐயா.

ஆசிரியர் : இதைப்போல உங்களால் வேறு எடுத்துக்காட்டுகள் சொல்ல முடியுமா?

(மாணவர்கள் ஒவ்வொருவராய் எழுந்து பதில் அளிக்கிறார்கள்)

| | |
|---|---|
| ஓடிப்போ | செல்வாய் |
| வாராய் | வாரீர்! வாரீர்! |

## செயல்பாடுகள்

- மாணவர்கள் குழுக்களாய்ப் பிரிந்து பாடநூலில் வருகின்ற வினைமுற்றுத் தொடர்களைத் திரட்டட்டும். அதிக அளவில் திரட்டும் மாணவர்களை வகுப்பறையில் பாராட்டுக.
- ஏவல் வினைமுற்றுத் தொடர்களை இயன்றளவு உருவாக்கி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

**நான் கற்றுக்கொண்டவை.**

| துணைக் கருத்துகள் | மிகநன்றாக | நன்றாக | ஓரளவு |
|---|---|---|---|
| பாடலை இசையோடு பாடினேன் | | | |
| கட்டுரைகளை வாசித்து கருத்தைப் புரிந்துகொண்டேன் | | | |
| குழுச் செயல்பாடுகளில் எனது கருத்தைப் பகிர்ந்து கொண்டேன் | | | |
| செய்தித் துணுக்குகள், படங்கள் சேகரித்து இதழ் தொகுப்பு போன்றவை தயாரித்தேன். | | | |
| வாழ்த்து அட்டை தயாரித்தேன். | | | |
| சுவரொட்டி தயாரித்தேன். | | | |
| சிறுகட்டுரை எழுதினேன். | | | |

3

# அமிழ்தமிழ்து



# இலக்கியச் சுவை

## இனியவை நாற்பது

மானம் அழிந்தபின் வாழாமை முன்இனிதே
தானம் அறியாமைத் தான்அடங்கி, வாழ்வு இனிதே
ஊனம் ஒன்றுஇன்றி, உயர்ந்த பொருள் உடைமை
மானிடவர்க்கு எல்லாம் இனிது.



## இன்னா நாற்பது

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா
நெடுநீர் புணைஇன்றி நீந்துதல் இன்னா
கடுமொழியாளர் தொடர்பு இன்னா; இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு.

## திரிகடுகம்

ஈதற்குச் செய்க, பொருளை! அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை! யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை! இம்மூன்றும்
இருள்உலகம் சேராத ஆறு.



### செயல்பாடுகள்

**குறிப்பேட்டில் எழுதுங்கள்.**

- இன்னா நாற்பதில் நல்லதல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளவை எவை?
- இருள் உலகம் சேராத மூன்று வழிமுறைகள் எவை?
- கொடுக்கப்பட்டிருக்கும் மூன்று பாடல்களுக்கும் ஆசிரியரின் உதவியோடு பொருள் கண்டு குறிப்பேட்டில் எழுதுங்கள்.

## திருக்குறள்

1. அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
   என்பும் உரியர் பிறர்க்கு.

2. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
   அணியல்ல மற்றுப் பிற.

3. காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
   ஞாலத்தின் மாணப் பெரிது.

4. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
   கோடாமை சான்றோர்க் கணி.

133 X 10 = 1330

இன்பம் 25

பொருள் 70

அறம் 38



'உலகப் பொதுமறை'

பொய்யாமொழிப் புலவர்

5. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

6. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

7. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் ஆண்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

8. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

9. வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

10. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

## செயல்பாடுகள்



கீழ்வரும் கருத்துகளுக்குப் பொருத்தமான குறட்பாக்களைக் கண்டறிந்து குழுக்களில் கலைந்துரையாடிக் கூறுங்கள்

- உண்மை என்று சிறப்பித்துச் சொல்லப் படுவது எது என்றால் எந்த உயிர்க்கும் யாதொரு தீங்கும் செய்யாத சொற்களைச் சொல்லுவதே ஆகும்.
- அடக்கம் என்னும் பண்பு ஒருவனைத் தேவர் உலகில் கொண்டு சேர்க்கும். அடங்காமை என்னும் குணம் நரகத்தில் தள்ளிவிடும்.



- குற்றங்களை மனத்தினால் நினைத்தாலும் பாவம். ஆகையால் பிறர் பொருளை அவர் அறியாதபடி திருடிக்கொள்வோம் என நினைப்பதுகூடத் தவறாகும்.

- தனக்குத் துன்பம் செய்தவரைத் தண்டித்தல் , அவரே நாணும்படியாக அவருக்கு நன்மைகளைச் செய்துவிடுவதாகும்.

- அன்பில்லாதவர் எப்பொருளையும் தமக்கே சொந்தம் என நினைப்பர். அன்புடையவர் தம் பொருள் மட்டுமின்றி உடலையும் பிறர்க்கு உரிமையாக்குவர்.

- ஒருவனது புறங்கூறும் குணத்தைக் கொண்டு அவன் போற்றத்தக்க உள்ளம் இல்லாதவன் என அறிந்துகொள்ளலாம்.

- தன்னைத் தோண்டுகிறவர்களைக் கூடத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளுதல் சிறந்த பண்பாகும்.

- ஒருவனுக்குத் துன்பம் வந்த காலத்தில் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அது இப்பூமியைவிட மிகவும் பெரியதாகும்.

- பெரியோரிடத்தில் வணக்கமும் எல்லாரிடத்தும் இனியசொல்லும் உடையவனாதலே ஒருவனுக்கு அணியாகும். இவையல்லாமல் உடம்பில் அணிபவை அணிகள் ஆகா.

- முன் சமமாக நின்று தன்னிடத்தில் வைக்கப்பட்ட பொருளின் அளவைச் சமமாகக் காட்டும் துலாக்கோல் போல் நடுவு நிலைமையிலிருந்து தவறாது இருத்தல் நல்லவர்களுக்கு அழகாகும்.



**கொடுக்கப்பட்டுள்ள குறள்களுக்கான அதிகாரங்களின் பெயர் களைக் கண்டுபிடித்துப் பட்டியலிடுங்கள்.**

## எழுதுங்கள்



திருவள்ளுவரின் வாழ்க்கைக் குறிப்பு.

## தெரிந்துகொள்ளுங்கள்

குறளுக்குப் பதின்மர் உரை செய்துள்ளனர். அவற்றுள் பரிமேலழகர் உரை சிறந்தது என்பர்

ஏழு சீர்களைக் கொண்ட ஈரடி வெண்பாக்களால் ஆனது

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று

# நல்ல நாடு

## காட்சி 1

### பாண்டிய மன்னனது அரண்மனை

(பாண்டிய மன்னரும் அமைச்சரும் பிறரும் கொலு வீற்றிருக்கின்றனர்)

(வாயில் காவலன் வருகிறான்)

காவலன் : வாழ்க! மன்னர் மன்னவா! வணக்கம். தெய்வப் புலவர் திருவள்ளுவப் பெருந்தகையார் வந்துள்ளார்.

மன்னர் : அப்படியா! வரச்சொல்...

திருவள்ளுவர்: வாழ்க! நின் கொற்றம்! வளர்க நின் புகழ்!

மன்னர் : வணக்கம். வரவேண்டும். புலவரே வர வேண்டும்.

திருவள்ளுவர்: என்றும் நன்றே நிலவுக!

மன்னர் : புலவர் பெருமானே! தாங்கள் இங்கு எழுந்தருளியது எங்கள் பெரும் பேறாகும். வேண்டுவது என்னவோ!

திருவள்ளுவர்: வேந்தே, ஒரு நல்ல நாடு எங்கு இருக்கிறதெனத் தேடிப் பார்க்க எண்ணிப் புறப்பட்டேன். உம்மிடம் விடைபெற்றுச் செல்லவே இங்கு வந்தேன்.



மன்னர் : (வியப்போடு) ஒரு நல்ல நாடு...!

அமைச்சர் : ஒரு நல்ல நாடு?

எல்லாரும் : ஒரு நல்ல நாடு?

திருவள்ளுவர்: ஆம் ஒரு நல்ல நாடு, சிறந்த நாடு, உயர்ந்த நாடு!

புலவர் : பாண்டிய நாட்டிற்குப் புறம்பாகவா?

திருவள்ளுவர்: ஆம்.

அவைப்புலவர்: அறிஞர் பெருமானே! தாங்கள் கூறுவதன் பொருள் என்ன?

மன்னர் : புலவர் பெருமக்களே! நமது தீந்தமிழ்ப் பாண்டிய நாட்டை விடச் சிறந்த ஒரு நாடு இவ்வுலகின் எப்பக்கத்திலாவது இருக்கிறதா என்று தேடிப் பார்க்கவே, பொய்யா மொழியினர் புறப்படுவதாகத் தெரிகிறது. இதில் என்ன தவறு இருக்கிறது?

திருவள்ளுவர்: இல்லை மன்னவா. நினது பாண்டிய நாட்டை யாவும் நிறைந்த நாடாக யான் கருதி இருந்தாலன்றோ மற்றொரு சிறந்த நாடு என்று கூறுவதற்குப் பொருள் உண்டு. அவ்வாறன்று; யான் காண விரும்பும் நல்ல ஒரு நாடு, இன்னும் எனது கண்களிற்படவில்லை.

மன்னர் : தென்பாண்டி நாடு பைந்தமிழ் வளர்க்கச் சங்கம் கண்ட நாடு. இந்த நாட்டைவிட ஒரு நல்ல நாடா? எனக்கொன்றும் விளங்கவில்லையே?

திருவள்ளுவர்: வேந்தே! தமிழ் வளர்த்த பெருமை உனக்குண்டு. அதனை யான் மறுக்கவில்லை. ஆனால், யான் காணவிரும்பும் ஒரு நல்ல நாடு மொழி வளர்க்கும் நாடு மட்டுமன்று, வேங்க டத்திற்கு அப்பாற் சென்றேனும், கடல் கடந்து சென்றேனும், உலகிலே அத்தகைய ஒரு நல்ல நாட்டைக் காண விழைகின்றேன்.

அமைச்சர் : புலவர் பெரும! மன்னிக்க வேண்டும். தங்கள் கருத்துப்படி ஒரு நல்ல நாடு எப்படியிருக்க வேண்டும்?

திருவள்ளுவர்: அமைச்சரே!

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு**

புரியவில்லையா! பசியும் பிணியும் பகையும் சேராத நாடே நல்ல நாடு என்றேன்.

அமைச்சர் : இம்மூன்றும், நமது நாட்டில் தலைகாட்டிப் பல ஆண்டுகள் ஆயினவே.

மன்னர் : அமைச்சரே! பொய்யா மொழியினார்க்கு முதலில் நமது பாண்டி நாடு முழுவதையும் காட்டுங்கள். பிறகு அவர் பிற நாடுகளையும் கண்டு வரட்டும்.

அமைச்சர் : மன்னர் கட்டளை.

(அழைத்துச் செல்லல்)

—— காட்சி முடிவு ——



## காட்சி 2

### தெரு

(வள்ளுவரும், அமைச்சரும், ஒரு காவலரும் வருகின்றனர், வழியில் ஓர் அன்னசத்திரம்)

அமைச்சர் : புலவர் பெரும! வந்தவர்களுக்கெல்லாம் இல்லையென்னாது, வாரிவாரிப் பெருஞ்சோறு வழங்கும் பேரானந்தக் காட்சியைக் கண்டீர்களல்லவா?

திருவள்ளுவர்: கண்டேன்... கண்டேன்...

அமைச்சர் : நகரத்தில் மட்டுமல்ல, பாண்டிய நாடு முழுவதும் ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு இவ்வாறு பெருஞ் சோறு அளித்து, மக்கள் பசியறியாது பாதுகாத்து வருகிறோம். பாண்டிய நாடு முழுவதும் ஒருவர்கூடப் பசியாக இருப்பதில்லை. பசி பசியென்று ஓலமிடும் குரல் கேட்கக்கூடாது என்பது மன்னரின் கட்டளை.

திருவள்ளுவர்: அப்படியா...!

அமைச்சர் : (ஒரு புறம் கையைக் காட்டி) அதோ, பாருங்கள்! மருந்துச் சாலையின் உள்ளிருந்து, நோயுற்ற மக்கள் சாரிசாரியாய் வெளிவருவதை. இத்தகைய மருந்துச் சாலைகள் நாடு முழுவதும் வைக்கப்பட்டுள்ளன. திறமையான மருத்துவர் களின் கண்காணிப்பில் பாண்டி நாட்டில் பிணி வந்தடை வதில்லை என்றே கூறலாம். இனி ஆயுதச் சாலைக்குச் செல்லுவோமா?



திருவள்ளுவர்: ஆயுதச் சாலைக்கா...?



அமைச்சர் : ஆம், பாண்டி நாட்டின் படைப் பெருக்கத்தையும் போர் கருவிகளின் திண்மைகளையும், வீரர்களின் வலிமையையும் உலகமே நன்கு அறியும். ஆதலின் பகையென்பதே நம் நாட்டைச் சேர்வதில்லை. வாருங்கள், பார்ப்போம்...

(செல்கின்றனர்)

—— காட்சி முடிவு ——

### காட்சி 3

## அரசர் கொலுவிருக்கை

(மன்னர் முதலியோர் இருக்கின்றனர், திருவள்ளுவரும் அமைச்சரும் வருகின்றனர்)

மன்னர் : வரவேண்டும்! வரவேண்டும் புலவர் பெரும! பாண்டி நாடு முழுவதையும் பார்த்தீர்களா?

திருவள்ளுவர்: நகரத்தைப் பார்த்ததே போதும் என்று வந்துவிட்டேன்; நாடு முழுவதும் பார்க்க யான் விரும்பவில்லை.

மன்னர் : மக்கள் பசியற்று வாழ, தெருவுக்குத்தெரு பெருஞ்சோறு வழங்குவதைக் கண்டீர்களா...?

திருவள்ளுவர் : கண்டேன்! பசி பசியென்று ஓலமிட்ட மக்கள், வயிறார உண்டு, மகிழ்ச்சியடைவதைக் கண்டேன்! பிணியினால் வருந்தும் பல்லாயிரவர் மருத்துவச் சாலைகளிலே மருந்து உண்பதைக் கண்டேன்! உலகமே வியக்கும் படைக் கருவிகளுடன் நினது ஆயுதச் சாலைகளையும் கண்டேன்!

மன்னர் : தாங்கள் கூறியதுபோல், பசியும் பிணியும் பகையும் இல்லாதொரு நல்ல நாடு, நமது தென்பாண்டி நாடு என்பதில், இன்னும் ஐயம் உள்ளதோ? மகிழ்ச்சிதானே!

திருவள்ளுவர் : மன்னவா! அமைச்சரே! புலவர் பெருமக்களே! என் கண்கள் இத்தனை நாளும் இவைகளைப் பாராது இருந்ததுபோல, இன்றும் பாராதிருந்திருக்கக் கூடாதா என்றே ஏங்கினேன்...

எல்லாரும் : ஆ? என்ன?

திருவள்ளுவர் : இத்தகைய காட்சிகளைக் காணவா நான் புறப்பட்டேன்? இந் நகரில் சோறு வழங்கும் இடத்தைப் பார்த்தபோது திடுக்கிட்டேன்! அமைச்சர், நாடு முழுவதும் இவ்வாறே நடைபெறுகிறது என்றதும் நடுங்கிவிட்டேன். இது பாண்டி நாட்டிலே பசியில்லை என்பதையா காட்டுகிறது? பசி, பசியென்று ஓலமிடும் பிச்சைக்காரர்களின் பெருக் கத்தையன்றோ காட்டுகிறது! தெருவுக்குத் தெரு மருந்துச் சாலைகள் என்றால், அது பிணியறியாது வாழும் மக்களின் நல் வாழ்வையா குறிக்கின்றது? எண்ணிப் பாருங்கள். நோயாளிகளின் பெருக்கத் தையன்றோ காட்டுகின்றது! அதுபோல ஆயுதச் சாலைகளும், படைப்பெருக் கமும், போர்க்கருவிகளின் திண்மை களையும் பார்க்கும் பொழுதே, இந் நாட்டிற் குப் பகைவர்கள் மிகுதியாக இருக்கிறார்கள் என்பது புலப்படவில்லையா? இத்தகைய



காட்சிகளைக் கண்டு யான் எஙஙனம் மகிழ்ச்சியடைய முடியும்? எனது உள்ளம் பெரிதும் வேதனைப்படுகிறது. இதுவா நல்ல நாடு? இல்லை... இல்லை...

எல்லாரும் : பின், தங்கள் கருத்து!

திருவள்ளுவர்: உழைக்கும் மக்கள் பசியால் வாடும் நிலை காணப்பட்டால் அது ஊராள்வோரின் குற்றமல்லவா? நோய்கள் உண்டா வதற் கிடமில்லாத முறையில் மக்கள் உடல்நலம் பேணி வாழ்வதற்குரிய வழி வகுத்துக் கொடுக்காமல், மருத்துவச் சாலைகளை மட்டும் அதிகரிப்பதால் யாது பயன்? அன்பு வழியால் பகைவரைத் தன்வயப்படுத்தி, நட்பை வளர்த்துப் போரை ஒழிக்க முயற்சி செய்யாமல் படைக்கருவிகளைப் பெருக்குவதால் என்ன பயன்?... ஆகவே சோறு வழங்காமல் பசியற்று வாழும் நாடாகவும், போரிடாமல் பகையற்று வாழும் நாடாகவும் உள்ள தென்பாண்டி நாட்டை யான் காண வேண்டும். சென்று வருகிறேன். யான் திரும்பி வரும்போது, இந்நாட்டை நல்லதொரு நாடாகக் காண்பேனாக! வாழ்க நின் கொற்றம்!

(செல்கிறார் வள்ளுவர்)

எல்லாரும் : தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் வாழ்க! பொதுமறை தந்த பெருமகனார் வாழ்க!

—— காட்சி முடிவு ——

## செயல்பாடுகள்

- **‘நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
  **வாய்நாடி வாய்ப்பச் செயல்’ இக்குறளைக் கட்டுரைக் கருத்தோடு இணைத்து விவாதியுங்கள்.**
- **நாடகத்தை இலக்கிய மன்ற நிகழ்ச்சிகளில் நடியுங்கள்.**
- **நாடகத்தின் ஏதாவது ஒரு காட்சியைக் கதையாக மாற்றி எழுதுங்கள்.**
- **ஒரு நல்ல நாடு எப்படி இருக்க வேண்டுமென்று வள்ளுவர் சொல்லு கிறார்?**

# முல்லைக்குத் தேர்

இயற்கை வளம் நிறைந்த மலை பறம்புமலை. அந்த மலையைச் சுற்றி அழகான முந்நூறு ஊர்கள் இருந்தன. அதனைப் பறம்பு நாடு என்று அழைத்தனர். பறம்பு நாட்டைப் பாரி என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் தமிழ் மீது பேரன்பு கொண்டிருந்தார்; புலவர்களை மதித்துப் போற்றினார். தன்னை நாடி வந்தவர்களுக்கு இல்லை என்னாது வாரி வழங்கினார். வள்ளல் பாரி என்று அவரை எல்லாரும் புகழ்ந்தார்கள். அவர் புகழ் உலகெங்கும் பரவியது.

ஒரு நாள் பாரி ஏதோ யோசனையுடன் அரண்மனையில் உலவிக் கொண்டிருந்தார். அப்போது தேரோட்டி அங்கு வந்தான். அரசனைப் பணிவாக வணங்கினான். “தேரோட்டியே! உன் வருகைக்காகத்தான் காத்திருந்தேன். நம் நாட்டின் மலை வளம் காண விரும்புகிறேன். இப்போதே புறப்பட வேண்டும்” என்றார் பாரி. “புறப்படுவோம் அரசே!” என்றான் தேரோட்டி. தேரோட்டி முன்னே செல்லப் பாரி பின்னால் வந்தார். அரண்மனை வாயிலில் அலங்கரிக் கப்பட்ட அழகான தேர் இருந்தது. அதில் வலிமையான குதிரைகள் பூட்டப்பட்டு இருந்தன. அரசர் பெருமிதத்துடன் தேரில் ஏறி அமர்ந்தார்; “தேரோட்டி! தேரைச் செலுத்து” என்றார்.

தேர் வேகமாகச் செல்லத் தொடங்கியது. சிறிது நேரத்தில் தலைநகரம் அவர்கள் கண்ணுக்கு மறைந்தது. மலைப் பாதையில் தேர் ஏறத் தொடங்கியது. “தேரோட்டி! தேரை மெல்லச் செலுத்து! வளமான பறம்பு மலை எவ்வளவு அழகாகக் காட்சி தருகிறது. இதன் அழகைக் காணக் கண் கோடி வேண்டுமே. ஆட்சியைத் துறந்து இங்கேயே இருந்து



விடலாம். இந்த இயற்கைச் சூழலில் என் உள்ளம் புத்துணர்ச்சி பெறுகிறது. இங்கே, என்ன அமைதியான சூழல்! எங்கும் பசுமை நிறைந்து வளமாகக் காட்சி அளிக்கிறதே" என்றார் பாரி. "ஆம் அரசே! இந்த மலை வளம்தான் நம் நாட்டிற்கு வற்றாத செல்வத் தைத் தருகிறது" என்றான் தேரோட்டி.

''அருவி கொட்டும் ஓசை உன் செவிகளில் வீழ்கிறதா?'' ''அரசே! என் செவிகளிலும் வீழ்கிறது." "ஆ... என்ன சுவையான அருவி நீர்! இதன் சுவையைப் புகழ்ந்து பாடாத புலவர்களே இல்லையே. இந்த அருவி நீரைக் குடிப்பவர்க்குத் தேனும் துவர்க்குமே தேரோட்டியே! இனிமேல் தேர் அசைந்து மெல்லச் செல்லட்டும். தேரில் கட்டியுள்ள மணிகளை எடுத்துவிடு". அப்படியே செய்கிறேன் அரசே! என்ற தேரோட்டி மணிகளை எடுக்கிறான். எதற்காக மணிகளை எடுக்கச் சொன்னேன் தெரியுமா? "அரசே! தேரின் மணியோசை கேட்டு இங்குள்ள உயிர்கள் அஞ்சும். அவற்றின் தனிமைக்கு எந்த இடையூறும் ஏற்படக் கூடாது. அதனால்தானே தேரின் மணிகளை எடுக்கச் சொல்கிறீர்கள்".

''தேரோட்டியே! என் உள்ளத்தைப் புரிந்து வைத்திருக்கிறாய். தேரை நிறுத்து. அதோ! அங்கே பார். எவ்வளவு மகிழ்ச்சியாக மான்

கூட்டங்கள் துள்ளிக் குதித்து ஓடுகின்றன. அந்த மான் குட்டியின் அழகைப்பார். அதன் மருண்ட பார்வைக்கு இந்த உலகத்தையே பரிசாக அளிக்கலாமே. "அரசே இங்கேயே சிறிது நேரம் இருந்துவிட்டோம். மான்கள் கூட்டமும் சென்றுவிட்டது. தேரை மெல்லச் செலுத்தட்டுமா!".


"செலுத்து" தேர் மெல்ல நகர்கிறது. ஆ! மேகக் கூட்டங்களைக் கண்ட மயில்களுக்குத்தான் எவ்வளவு மகிழ்ச்சி! தோகையை விரித்து ஆடுகின்றனவே. இவற்றின் தோகைகள் வானவில்லின் அழகை மிஞ்சுகின்றனவே.

என்ன அழகிய காட்சி! இயற்கை தரும் இன்பத்திற்கே ஈடு இணை ஏது? தேர் அங்கிருந்து மெல்ல நகர்கிறது. நிழல் தரும் மரங்கள் என்னிடம் ஏதோ பேச முற்படுவதைப் போல உள்ளதே. கொடிகள் அசைந்து ஆடுவது என்னிடம் கொஞ்சுவதைப்போல உள்ளதே. தேர் மெல்லச் சென்று கொண்டிருக்கிறது.



வழியில் ஒரு முல்லைக் கொடி. அருகில் கொழுகொம்பு இல்லை. அதனால் காற்றில் அங்கும் இங்கும் ஆடிக் கொண்டிருந்தது. இந்த அவலக் காட்சியைக் கண்டார் பாரி. அவர் உள்ளம் தவித்தது. 'ஆ...' என்று அலறினார். தேரிலிருந்து கீழே குதித்தார். எதிர்பாராது நடந்ததைக் கண்டு திகைத்தான் தேரோட்டி. "அரசே என்ன நிகழ்ந்தது" என்று பணிவாகக் கேட்டான். அரசன் எதுவும் பேசவில்லை.

"முல்லைக் கொடியே உன் நிலை இரங்கத்தக்கது. நீ படர்ந்து தழைக்க அருகே கொழுகொம்பே இல்லையே? காற்று அலைக்கழிக்க நீ அங்கும் இங்கும் அசைந்து துன்புறுகிறாய்" என்று கூறி, அவர் முல்லைக் கொடியை



முற்றிலுமாகப் பார்த்தார். அது தன்னைப் பார்த்து ஏங்குவது போல் தோன்றியது.

வள்ளல் பாரியின் உள்ளத்தை இந்தக் காட்சி நெகிழவைத்தது. "தேரோட்டியே! தேரை இந்த முல்லைக் கொடியின் அருகே நிறுத்து" என்றார் பாரி. அவனும் அவ்வாறே செய்தான். வள்ளல் பெருமான், அந்த முல்லைக் கொடியை அன்புடன் தடவிக் கொடுத்தார். மெல்லக் கொடியைத் தேரின் மேல் படர விட்டார். தன்னை மறந்து அங்கேயே நின்றார்.

## செயல்பாடுகள்

- **வள்ளல் பாரியும் தேரோட்டியும் உரையாடுவதை நாடக வடிவில் எழுதுங்கள்; நடித்துக் காட்டுங்கள்.**
- **இப்பாடப் பகுதியில் காணப்படும் வருணனை வாக்கியங்களைக் குறிப்பேட்டில் எழுதுங்கள்.**


பாடி மகிழுங்கள்

## தேமதுரத் தமிழ்



யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.
யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை;
ஊமையராய்ச், செவிடர்களாய்க், குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

– மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.




## செயல்பாடுகள்

- பாடலை வாசித்துத் தமிழ்மொழியின் சிறப்புகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- உங்களுக்குப் பிடித்த பாரதியாரின் கவிதைகளைத் திரட்டி நுமது கவிதைப் புத்தகத்தில் எழுதுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த திருக்குறள்களைக் குறிப்பேட்டில் எழுதுங்கள்.
- ‘முல்லைக்குத் தேர்’ என்ற பாடப்பகுதியை உங்கள் சொந்தநடையில் கதையாகச் சொல்லுங்கள்.
- நான் கற்றுக்கொண்டவை.

| துணைக் கருத்துகள் | மிகநன்றாக | நன்றாக | ஓரளவு |
|---|---|---|---|
| செய்யுளின் கருத்துகளைப் புரிந்துகொண்டேன் | | | |
| குறள்களுக்கேற்ற கதைகளைப் புரிந்துகொண்டேன் | | | |
| நாடகத்தைக் கதையாக மாற்ற முடியும் | | | |
| நாடகத்தில் எனது பங்கு | | | |
| நான் வகுப்பில் நடத்திய உரையாடல். | | | |
| நான் கதை சொல்லியது. | | | |

4

# நலம் விரும்புவோம்



'கல்வி எனது உரிமை'

# பட்டாம் பூச்சிகள்



கொல்லம் மாவட்டம் அம்பநாடு அரசு நடுநிலைப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் தம் ஆசிரியருடன் திருவனந்தபுரத்திலுள்ள ஒரு சிறப்புப் பள்ளியைப் பார்க்கச் சென்றனர். பள்ளியின் முன்புறம் இருந்த அலங்காரச் செடிகள், பசுமையான புல்வெளி, அழகிய வண்ணப் பூக்கள் ஆகியவை மாணவர்களை வரவேற்றன.

பள்ளியின் முதல்வர் ஜெயபாலன் மாணவர்களை வரவேற்று அழைத்துச் சென்றார்.



முதல்வர் : இப்பள்ளி ஒரு சிறப்புப்பள்ளி. இங்குப் பயிலும் மாணவர்கள் அனைவருமே சிறப்புக் குழந்தைகள். ஐந்து வயதுக்கும் பதினைந்து வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகள் இங்கே பயில்கிறார்கள்.



ரவி : ஐயா, இவர்களைப் பார்க்கும்போது எந்தவிதமான வேறுபாடும் தெரியவில்லையே?

முதல்வர் : சரிதான், முதல் பார்வையில் இவர்களிடம் எந்த வேறுபாடும் தெரியாது. ஆனால், சிறிது நேரம் இவர்களை உற்றுக் கவனித்துப் பாருங்கள்.

கயல்விழி : ஆம் ஐயா! ஒரு சில குழந்தைகள் எங்கோ பார்த்தபடி இருக்கின்றனர். ஒரு சில குழந்தைகள் இயல்புக்கு மீறிய உற்சாகத்துடன், பரபரப்போடு அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருக்கின்றனர். ஒருசில குழந்தைகளோ நடப்பதற்கும், குதிப்பதற்கும்கூட யோசித்துக் கொண்டிருக்கின்றனர்.

பார்த்திபன் : இவர்கள் ஏன் இப்படிக் காணப்படுகிறார்கள்? எங்களைப் போல சாதாரணமானவர்களாக இல்லையே ஏன்?

முதல்வர் : ஆம், இவர்கள் அனைவருக்கும் பலவிதமான பிரச்சினைகள். மூளைத் திறன் பாதிப்பு, உடல் விறைப்பு,

மூளைத்திறன் குறைவு, கற்றலில் குறைபாடு, எனப் பல விதமான பிரச்சினைகள் இக் குழந்தைகளுக்கு உண்டு.

செண்பகம் : ஐயா, கொஞ்சம் விளக்கமாகச் சொல்கிறீர்களா?

முதல்வர் : அதாவது, இக்குழந்தைகளுக்கு உங்களைப் போன்று விளையாடுவதற்கோ, பசியெடுக்கிறது என்று சொல்வதற்கோ தெரியாது. சிறுநீர் கழிக்கவேண்டும் என்று சொல்வதற்குக் கூட இவர்களுக்குத் தெரியாது.

ரவி : இங்கு வரும் குழந்தைகளுக்கு இத்தகைய பயிற்சிகளை நீங்கள் அளிக்கிறீர்களா, ஐயா?

முதல்வர் : முதலில் இக்குழந்தைகளை எங்கள் மருத்துவக்குழு பரிசோதிக்கும். பிறகு அவர்களின் பிரச்சினைகளுக்கு ஏற்ற பயிற்சிகளை அளிப்போம். யோகா, ஏணியில் ஏறுவது, இரப்பர் பந்துகளைச் சரியாகக் கூடையில் எறிவது, சின்னச் சின்ன பிளாஸ்டிக் வடிவங்களை அதற்குரிய சட்டங்களில் பொருத்துவது இப்படிப் பல தரப்பட்ட பயிற்சிகளைக் கொடுக்கிறோம்.



பார்த்திபன் : ஐயா! உங்கள் சேவை பாராட்டுக்குரியது.

முதல்வர் : மாணவர்களே, இச் சிறப்புக் குழந்தைகளுக்கு அவர்களின் அன்றாடக் காரியங்களை, அவர்களே பார்த்துக் கொள்ளும் அளவுக்கு, அன்றாடக் கற்றல் செயல்திறன்களை வளர்ப்பதில் நாங்கள் கவனமாக இருக்கிறோம். கற்பித்தல் என்பது மிகப்பெரிய சேவை. அதிலும் சிறப்புக் குழந்தைகளுக்குக் கற்பிப்பது தெய்வீகமான பணி. இப்பணியைச் செய்பவர்களுக்கு நம்பிக்கையும் பொறுமையும் தேவை. அது எங்களுக்கு அளவுக்கு அதிகமாகவே இருக்கிறது.

(மாணவர்கள் அனைவரும் ஆச்சரியத்தோடும் இப்படிப்பட்ட குழந்தைகளும் சமூகத்தில் தங்களைப் போலவே மதிக்கப்பட வேண்டியவர்கள் என்ற எண்ணத்தோடும் முதல்வருக்கு நன்றிகூறி விடைபெற்றனர்.)

## செயல்பாடுகள்

**பின்வரும் சொற்கள் இடம்பெறும் வாக்கியங்களைப் பாடத்திலிருந்து எடுத்து எழுதுங்கள்.**

| | |
|---|---|
| கூர்ந்து, | படிக்கும் |
| வேறுபாடு | வியப்பு |
| வேலை | எல்லாரும் |

**இந்தக் களப்பயண அனுபவத்தை நண்பனுக்குக் கடிதம் வாயிலாகத் தெரியப்படுத்தவும்.**

# சாதனை நாயகி



அவள் பெயர் ஹெலன். அவளுக்கு நண்பர்கள் யாருமே கிடையாது. ஒரு காய்ச்சலில் அவளுக்குக் கண் பார்வையும் காதுகேட்கும் திறனும் போய்விட்டது. வாய் பேசவும் வரவில்லை. அதனால், அவளால் யாரோடும் எந்தத் தொடர்பும் கொள்ள முடியவில்லை. ஹெலன் தனியாகவே இருந்தாள். அம்மா, கேட் ஆடம்ஸ் மட்டும் அவளுடன் இருப்பார்.

ஹெலனின் நெருக்கமான தோழி மார்த்தா. ஹெலன் மார்த்தாவிடமிருந்து நடக்கவும் இடித்துக்கொள்ளாமல் ஓடவும் கற்றாள்.

ஹெலனின் தந்தை, ஆர்தர் கெல்லர். அமெரிக்க ராணுவத்தில் பெரிய பதவியில் இருந்தார். மகளின் நிலையைக் கண்டு அவருக்குத் துயரமாக இருந்தது. டாக்டர். ஜூலியன் இ ஸோலீம் என்பவரிடம் இவளை அழைத்துச் செல்ல முயன்றார். ஹெலன் போக மறுத்தாள். மார்த்தா உதவியோடு பெற்றோர்களைப் பணியவைத்தாள். அதனால் தனது வீட்டுக்கே வந்து, ஹெலனைச் சரிசெய்ய ஒருவர் கிடைப்பாரா என்று ஹெலனின் அப்பா கேட்டார். டாக்டர் ஜூலியன், ஒருவரை அனுப்பினார். அப்படி அனுப்பப்பட்ட ஆசிரியைதான் ஆனி சலிவான்.

ஆனி சலிவான், ஹெலனைத் தேடி வந்தபோது ஹெலனுக்கு ஆறு வயது. பேசினால் கேட்காது. பேசவும் தெரியாது. சமிக்ஞைகளைப் பார்க்கவும் முடியாது. பின் எப்படி அவரோடு தகவல்களைப் பகிர்ந்துகொள்வது? ஹெலனின் பரிதாபத்துக்குரிய வாழ்க்கையைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார் ஆனி சலிவான்.

பொம்மை ஒன்றை அவர் அவளுக்காக வாங்கி வந்திருந்தார். அதைப் பார்க்க ஹெலனால் முடியாது. அதற்குப் பொம்மை என்று பெயர் என்பது கூட அவளுக்குத் தெரியாது. ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பெயர் இருக்கிறது என்பது தெரியாது. ஆனி பலவாறு முயற்சித்தார். ஜாடி, பொம்மை, மேஜை என்று உணர்த்த எவ்வளவு முயன்றாலும் தோல்வியே கிடைத்தது.

ஒருநாள் பொம்மை உடைந்தது. கண்ணாடி ஜாரும் உடைந்தது. அந்த நொடியில் 'தண்ணீர் குழாயிலிருந்து வந்தது' என்பதற்கான எழுத்து சமிக்ஞையைக் கையில் தடவியபோது சட்டென உணர்ந்தாள் ஹெலன். அப்போதிருந்து சொற்களைக் கற்க ஆரம்பித்தாள். ஒரு வாரத்துக்கு 1,000 சொற்களைத் தொடு உணர்ச்சி மூலம் கற்றாள் ஹெலன்.



ஆனியும் ஹெலனும் 39 வருடங்கள் ஒன்றாக இருந்து, ஆசிரியர் மாணவர் உறவுக்கே இலக்கணமானார்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகி ஓர் அறிவு ஜீவியாக வாழ்ந்து 34 புத்தகங்கள் எழுதிய ஹெலன் கெல்லர், சாதனை நாயகிதான் என்பதில் சந்தேகமே இல்லை.


## செயல்பாடுகள்

- ஹெலனின் இளமைப் பருவத்தைப் பற்றிக் கூறுங்கள்.
- ஆனி சலிவான் ஹெலனுக்கு எவ்வாறெல்லாம் உதவினார்?
- ஹெலனை சாதனை நாயகி என்று ஏன் சொல்கிறார்கள்?

# சின்னானும் சிட்டுக்குருவியும்

சின்னானுக்கு ஒரு நூதனமான பிரச்சினை. அவரும் அவருடைய மனைவியும் சலவைத் தொழிலாளர்கள். கொஞ்ச நாட்களாக அவர்கள் துவைத்துக் காயப்போடும் துணிகளைச் சிட்டுக்குருவிகள் அசுத்தம் செய்து விட்டுச் சென்றன.

சின்னான், முதலில் இதைத் தற்செயல் என்று நினைத்தார். ஆனால் அடுத்தடுத்த நாட்களிலும் இதுபோலவே நடந்தது. பிற தொழிலாளர்களும் இதே படித்துறையில்தான் துணிகளை வெளுக்கிறார்கள். குருவிகள்



அந்தத் துணிகளை அண்டவில்லை. சின்னானின் துணிகள் மீது மட்டுமே அவை எச்சம் இட்டுச்சென்றன. இதனால், துணிகளை மீண்டும் அலசிக் காயப்போடுவது மிகுந்த சோதனையாகிவிட்டது.

"இது ஏதோ சாமி குத்தம் மாதிரி தெரியுது" என்றார்கள் நண்பர்கள்.

சின்னான் வசிக்கும் ஊரில் சாமியார் ஒருவர் இருந்தார். நல்ல மனிதர். ஊர் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு சொல்வார். சின்னான் தமது குடும்பத்துடன் சென்று விஷயத்தைச் சொன்னார்.

சாமியார் சின்னானை உற்றுப் பார்த்தார். சின்னான் தவறு செய்பவர் போன்று தெரியவில்லை. வெள்ளந்தியாகத்தான் தெரிந்தார். அடுத்து அவன் மனைவியிடம் பேசினார். அவர்களைச் சற்று தூரத்தில் இருக்கச் சொல்லி விட்டுச் சின்னானின் மகன் ஆறுமுகத்திடம் பேச்சுக்கொடுத்தார்.

"நீ என்ன படிக்கிறே?"

"நாலாவது படிச்சேன். இப்போ ஸ்கூலுக்குப் போகலை. நம்மள மாதிரி ஏழை களுக்குப் படிப்பு எதுக்கு? நீ படிச்சது போதும் வீட்டுலயே இருன்னு அய்யா சொல்லிட்டாரு" என்றான் ஆறுமுகம். "உனக்குப் படிக்க ஆசையா இல்லையா?" சாமியார் கேட்டார்.

"ஆசைதான். ஆனா, அய்யா விடணுமே" என்றான் ஆறுமுகம். நான் அனுப்பச் சொல்றேன் என்று சாமியார் சொல்ல, சரி என்று தலையாட்டிய ஆறுமுகம் நான் பள்ளிக்கூடம் போய்ட்டா சிட்டுக்குருவி என்ன செய்யும் என்றான். 'எந்தச் சிட்டுக்குருவி' எனச் சாமியார் ஆச்சரியத்தில் நிமிர்ந்தார்.

"எங்க வீட்டுக் கூரைக்கொட்டகையில் சிட்டுக்குருவி ஒண்ணு கூடு கட்டியிருக்கு. தினமும் அய்யாவும் அம்மாவும் வேலைக்குப் போனதும் அது கீழே இறங்கிவரும். சிர்ப்சிர்ப்னு கொஞ்ச நேரம் என்கூட விளையாடிட்டு வெளியே போகும். நான் ஸ்கூலுக்குப் போயிட்டா அது என்னைத் தேடுமே" என்றான் ஆறுமுகம்.

"குருவி உன்னைப் பார்த்துப் பயப்படாதா?" சாமியார் கேட்டார். "பயப்படாது. குருவியும் நானும் நண்பர்கள்" என்றான் ஆறுமுகம்.

சாமியார் யோசித்தார். அங்கேயும் குருவி. இங்கேயும் குருவி. அங்கே சின்னான் தொழிலுக்குக் குருவிகள் இடைஞ்சல் தருகின்றன. இங்கே ஒரு குருவி சிறுவன் ஆறுமுகத்தோடு நட்பாக இருக்கிறது. இரண்டும் வெவ்வேறு



இடங்களில் நிகழும் சம்பவங்கள். இருந்தாலும் சிட்டுக்குருவிகளின் செயலை ஒரு விசித்திரமான நிகழ்வாக ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது.

சிட்டுக்குருவி, சுதந்திரத்தின் அடையாளமாக அறியப்படும் ஒரு பறவை. சுறுசுறுப்பாக இருக்கும். சிறார்களைச் சிட்டுக்குருவிகள் போன்று ஆடிப் பாடித் திரிகிறார்கள் என்பார்கள். படிக்க வேண்டிய வயதில் பள்ளிக்கூடம் செல்வதுதான் சிறுவர்களுக்கு உண்மையான சுதந்திரம். எனவே ஆறு முகத்தை மீண்டும் பள்ளிக்கூடம் அனுப்புவதில் உறுதியாக இருந்தார் சாமியார்.



சின்னானையும் அவன் மனைவியையும் அருகே வரச் சொன்னார். "நீங்க, உங்க பையனைப் பள்ளிக்கூடம் அனுப்பிவைங்க. உங்க பிரச்சினை தீரும்" என்றார்.

''என்ன சாமி சொல்றீங்க! மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்ட மாதிரி" என்று நினைத்துக் கொண்டு சின்னான் ஏதோ பேச வாயெடுத்தார்.

"நான் சொல்றதை மட்டும் செய்ங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும்" என்று சொல்லி சாமியார் அவர்களை அனுப்பிவிட்டார். இந்தப் பிரச் சினைக்கு இதுவே சரியான தீர்வு என்று சாமியார் நம் பினார்.

சாமியாரின் கட்டளைக்குப் பணிந்து சின்னான் ஆறுமுகத்தை மீண்டும் பள்ளிக்கு அனுப்பிவைத்தார். அதன்பிறகு துணிகளை இரண்டாவது முறை வெளுக்க வேண்டிய அவசியம் சின்னானுக்கு ஏற்படவில்லை!


## செயல்பாடுகள்



**குழுவாகப் பிரிந்து கதையை வாசித்து வகுப்பில் குழுவுக்கு ஒருவராகக் கதையைச் சொல்லுங்கள்.**

- 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்ட மாதிரி' என்ற பழமொழியைப் போல வாழ்க்கையுடன் தொடர்புடைய பழமொழிகளைத் திரட்டி வகுப்பில் வெளியிடுங்கள்.
- "சின்னானுக்குத் துணிகளை இரண்டாவது முறை வெளுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை" - இதில் மறைந்துள்ள கருத்தை விளக்குங்கள்.

## கடமைகளும் உரிமைகளும்



**மனோ :** இன்றைய இலக்கிய மன்றத் தொடக்க விழாவினை நம் பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள், தலைமை ஏற்று நடத்தித் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து.

(அனைவரும் எழுந்து நின்று பாடுதல்)

**தலைமையாசிரியர் :** ஆசிரியப் பெருமக்களே! அன்புக் குழந்தைகளே! அனைவருக்கும் வணக்கம். சிறார்களின் கடமை

களும் உரிமைகளும் என்ற தலைப்பில் பேச இருக்கின்ற, உங்களைக் கண்டு பெரிதும் அக மகிழ்கிறேன். உங்களுக்கு என் பாராட்டுகளும் நல்வாழ்த்துகளும் உரித்தாகுக.

**மனோ :** **குழந்தைகளின் கடமைகள்** என்னும் தலைப்பில், தன் கருத்துகளை எடுத்துரைக்க மாணவி நித்யாவை அழைக்கிறேன்.

**நித்யா :** அவையோருக்கு வணக்கம். கடமைகள் என்பவை பெரியவர்களுக்கு மட்டுமல்ல; சிறியவர்களுக்கும் உண்டு. இன்றைய வாழ்க்கை முறையும் சமூக மாற்றங்களும் குழந்தைகள் ஆற்ற வேண்டிய கடமைகளை மறக்கச் செய்துவிடுகின்றன.

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா!

என்று நாம் கீழ் வகுப்பில் படித்த மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதையைப் பாருங்கள். நாம் ஆற்ற வேண்டிய பல கடமைகளும் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், கணினி விளை யாட்டுக்களிலும் மூழ்கிக் கிடக்கும் நாம் வீட்டில் ஆற்ற வேண்டிய கடமைகள், கடைப் பிடிக்க வேண்டிய நற்பழக்கங்கள் போன்றவற்றை அறியாமலேயே வளர்கிறோம்.



இன்றைய பெற்றோர் பலரும் இவற்றைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதும் இல்லை.




பள்ளிக்கூடத்தை எடுத்துக் கொண்டோமானால் உரிய நேரத்தில் பள்ளிக்கு வருவது, ஆசிரியர்களுக்கு வணக்கம் செலுத்துவது, வகுப்பறையையும் பள்ளிச் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்வது, சீருடை அணிவது, பள்ளி விழாக்களில் பங்கு பெறுவது, தேசியச் சின்னங்களை மதிப்பது, பள்ளியின் விதிமுறைகளை அனுசரிப்பது போன்ற கடமைகளை மாணவர்கள் பலரும் இன்று கடைப்பிடிப்பதில்லை.

வெளிநாடு சென்று வந்த ஒரு முன்னாள் ஆசிரியர் கூறிய செய்திகளை, எங்கள் ஆசிரியர் வகுப்பறையில் இவ்வாறு கூறினார். "குழந்தைகளே! நாம் திறந்த வெளிகளை இங்குக் கழிப்பிடமாகப் பயன்படுத்துகிறோம்; எச்சில் துப்புகிறோம்; பொது இடங்களிலும் சாலை ஓரங்களிலும் குப்பைகளைக் கொட்டுகிறோம்; குளம் குட்டைகளில் பிளாஸ்டிக் பொருட்கள், கழிவுகளை வீசி எறிகிறோம்; சாலை விதிகளை மதிக்காமல் நடக்கிறோம். ஆனால், பெரும்பான்மையான வெளிநாடுகளில் இப்படிப்பட்ட எந்தச் செயல்களுமே நடைபெறுவதில்லை".

சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களையும், அவர்கள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும் அங்கே சொல்லிக் கொடுக்கிறார்கள்; குழந்தைகளும் அதன்படி நடக்கிறார்கள்.

எனவே, அன்பு நண்பர்களே! இத்தகைய ஒழுக்கங்களை நாமும் கடைப்பிடித்து நமது வீட்டையும், பள்ளியையும், நாட்டையும், சுத்தமாகப் பாதுகாப்போம். நன்றி! வணக்கம்.

**மனோ :** **தற்போது குழந்தைகளின் உரிமைகள்** என்னும் தலைப்பில் கருத்துகளைக் கூற சலீமை அழைக்கிறேன்.

**சலீம் :** அவையோரை வணங்குகிறேன். குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டிய பல உரிமைகள் இன்றைக்கு மறுக்கப்பட்டு வருகின்றன. குழந்தைகளுக்குரிய அங்கீகாரங்கள் உரிய இடத்தில் கிடைக்காமல் போகின்றன. குழந்தைகளிடம் பரிவு காட்டி, அவர்களையும் மனிதர்களாக ஏற்க மறுக்கும் சமூகத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். உலகில் லட்சக்கணக்கான குழந்தைகள் உணவு, கல்வி, மருத்துவ வசதி கிடைக்காமல் வாடிக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள் உடலளவிலும், மனதளவிலும் பாதிப்புக் குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள்.



பட்டாம்பூச்சிபோல் பறந்துதிரிய வேண்டிய குழந்தைகள் குழந்தைத் தொழில், குழந்தைத் திருமணம், உடல் உறுப்புக்கள் திருட்டு, பெற்றோரின் கொடுமைகள் போன்ற பல இன்னல்களால் கூண்டுக்குள் அடைபட்ட கிளிகளாய் வாடிப்போய் நிற்கிறார்கள்.

குழந்தைகளின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். குழந்தைகளுக்கு உண்ண உணவும், வாழ இருப்பிடமும், உடல் நலம் பேண மருத்துவமும், பாதுகாப்பான வாழ்க்கையும், கல்வியும் கட்டாயம் வேண்டும். வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**தலைமையாசிரியர் :** நம் பள்ளி மாணவர்கள் நித்யாவும் சலீமும் குழந்தைகளின் கடமைகளும், உரிமைகளும் என்னும் தலைப்பில் மிகச் சிறப்பாகப் பேசினார்கள். அவர்கள் கூறிய கருத்துகளை

வாழ்க்கையில் கடைப்பிடித்து, குழந்தைகளுக்கான உரிமைகளைப் பெற்று, நாளைய சமுதாயத்தை மேம்படுத்த உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

மாணவன் ஜஸ்டின் நன்றி நவில, நாட்டுப்பண்ணுடன் கருத்தரங்கம் இனிதே நிறைவு பெற்றது.

## செயல்பாடுகள்

- மாணவி நித்யா 'குழந்தைகளின் கடமைகள்' என்ற தலைப்பில் கூறிய கருத்துகள் எவை? குழுவில் கலந்துரையாடிக் குறிப்பேட்டில் எழுதுங்கள்.
- பள்ளி இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகள் அடுத்த நாள் பத்திரிக்கையில் எவ்வாறு வந்திருக்கும்? எழுதிப்பாருங்கள்.
- குழந்தைகளின் உரிமைகள் என்ற தலைப்பில் பேசிய சலீமைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதுங்கள்.
- பள்ளியில் நடைபெறும் குடியரசுதின விழாவில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுக் குறிப்புகள் தயாராக்குங்கள்.

## நான் கற்றுக்கொண்டவை.

| துணைக் கருத்துகள் | மிகநன்றாக | நன்றாக | ஓரளவு |
|---|---|---|---|
| நண்பர்களோடு குழுச்செயல் பாடுகளில் பங்குபெற்றேன். | | | |
| கடிதம் எழுதினேன். | | | |
| கதையை வாசிக்கவும் கதா பாத்திரங்களின் சிறப்புகளை விவரிக்கவும் செய்தேன். | | | |
| பத்திரிகைச் செய்தி தயாரித்தேன். | | | |

5

# உதவும் கரங்கள்



'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றும் அறியேன் பராபரமே'

# அன்னை தெரேசா



நன்மை செய்யும் தேவதையாய் - எல்லா
நாடும் புகழ வாழ்ந்தாரே
அன்னை தெரேசா என்பாரே - மக்கள்
அனைவர் நெஞ்சிலும் நின்றாரே!

வெள்ளைச் சேலை ஓரத்தில் - நன்கு
விளங்கும் கரைகள் நீலத்தில்!
கள்ளம் இல்லாப் புன்சிரிப்பு - பார்வை
கருணை பொழியும் முழு நிலவு!

உலகில் எங்குச் சென்றாலும் -  ஏழைக்கு
உதவ வேண்டும் என்றிட்டார்!
பலரும் அளித்த நன்கொடையால் - பிணியால்
படுதுயர் நீக்கி இன்புற்றார்!

உடலே தளர்ந்து போனாலும் - உதவும்
உள்ளம் தளராப் பண்பாலே
கடமை மக்கள் தொண்டென்றே - ஒவ்வொரு
கணமும் உழைப்பது நன்றென்றார்!



தொழுநோயாளர் துயர்கண்டார் - அவர்கள்
துன்பம் துடைத்தார் அன்போடு!
இழிவாய் எவரையும் ஒதுக்காமல் - அனாதை
இல்லம் அமைத்தார் உதவிடவே!

அன்னிய நாட்டில் பிறந்தாலும் - சொந்த
அன்னை போல நம்மக்கள்
இன்னல் கண்டு துடித்தாரே - நாமும்
இனியவர் வழியே நடப்போமே!

- பூவை அமுதன்

## செயல்பாடுகள்

- பாடலை இசையோடு பாடுங்கள்.
- பாடலின் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.
- கீழ்க்காணும் சொற்களுக்கு அகரமுதலியைப் பயன் படுத்திப் பொருள் காணுங்கள்.

  கள்ளம், கருணை, துயர், கணம், இழிவு, இன்னல்

- 'உலகில் எங்குச் சென்றாலும் ஏழைக்கு உதவ வேண்டும்' இவ்வரிகளால் நீங்கள் புரிந்துகொண்டது என்ன? கூறுங்கள்.



## சந்திரனின் நாட்குறிப்பு

6- அக்டோபர்- 2014, திங்கள்

எனது நாட்குறிப்பு...

இன்று காலையில் நண்பனுடன் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தேன். வழியில் நான்காம் வகுப்பில் படிக்கும் குமார் மிகுந்த பரபரப்போடு ஓடிவந்து கொண்டிருந்தான்.

நாங்கள் அவனைப் பார்த்து, "குமார் . . . ஏன் இப்படிக் காலையிலேயே பரபரப்புடன் வருகிறாய்?" என்று கேட்டோம். அவனோ தான் வருகிற பாதையைச் சுட்டிக்காட்டி, "அங்கே ஒரு பாட்டி வீழ்ந்து கிடக்கிறாள்" என்றான்.

KT 465-6/Tamil Reader-5 (AT)

“சரி, கவலைப்படாதே. வா, போய்ப் பார்ப்போம்” என்று மூவரும் அவ் விடத்திற்கு ஓடிச் சென்றோம். அங்கே ஒரு வயதான பாட்டி வீழ்ந்து கிடந்தாள். எழுந்து நிற்கக்கூட அவளால் இயலவில்லை. உடல் நிலை சரியில்லாததால் அரசு மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் கீழே விழுந்துவிட்டதாகச் சொன்னாள். ‘காலையில் ஏதாவது சாப்பிட்டீர்களா?’ என்று கேட்டோம். இல்லை என்றாள் பாட்டி. உடனே என் புத்தகப் பையிலிருந்த உணவுப் பொட்டலத்தைப் பாட்டிக்குச் சாப்பிடக் கொடுத்தேன். பிறகு நானும் என் நண்பனும் சேர்ந்து பாட்டியின் கையைப் பிடித்து அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம்.

மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளை வாங்கிப் பாட்டிக்குக் கொடுத்தோம். என் சட்டைப்பையில் இருந்த பத்து ரூபாயையும் பாட்டிக்குக் கொடுத் தேன். அவள் முகத்தில் புன்னகை மலர்வதைப் பார்த்தோம்.

பள்ளிக்குச் சற்று தாமதமாகவே வந்தோம். ஆசிரியை காரணத்தைக் கேட்டார். நாங்கள் நடந்ததைச் சொன்னோம். ஆசிரியை எங்களைப் பாராட்டியதோடு பிற மாணவர்கள் முன்னிலையில் வாழ்த்தும் கூறினார். அனைவரும் கை தட்டி எங்களைப் பாராட்டினர்.

இந்நாள் எங்கள் வாழ்வில் மறக்க முடியாத ஓர் இனிய நாளாகும்.


## செயல்பாடுகள்

**உங்கள் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சியை நாட்குறிப்பு வடிவில் எழுதுங்கள்.**

**உங்கள் பிறந்தநாள் விழாவை எப்படியெல்லாம் கொண்டாடுவீர்கள்?**

- வீட்டை அலங்கரிப்போம்


# கருணை உள்ளம்



சோழ மன்னர்களுள் தனிச் சிறப்பினைப் பெற்றவர்கள் பலர். அவர்களுள் சிபி சக்கரவர்த்தி குறிப்பிடத்தக்கவராவார். வள்ளல்கள் பெயரைச் சொல்லும் போதெல்லாம் சிபியின் பெயரைச் சொல்லாமல் இருப்பதில்லை.

ஒருமுறை சிபி தன்னுடைய அரண்மனைத் தோட்டத்தில் உலாவச் சென்றிருந்தார். பழங்கள் நிறைந்த தோட்டத்தில் பல்வேறு பறவைகள் பறந்தபடி இருந்தன. அப்போது ஒரு புறாவைப் பருந்தொன்று துரத்திக் கொண்டு வந்தது. தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அச்சத்துடன் சத்தமிட்டுக் கொண்டே பறந்து சென்று சிபியின் கையில் உட்கார்ந்தது புறா.

நடந்தவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த சிபி சக்கரவர்த்தி புறாவுக்கு அடைக்கலம் கொடுத்தார். அப்போது பருந்து சிபியின் அருகே சென்றது. அவனிடம் 'எனது உணவினை எங்கே மறைத்தாய்?' என்று கேட்டது. உடனே சிபியும் 'புறாவினுக்கு நான் அடைக்கலம் கொடுத்துவிட்டதால் வேறு உணவினைத் தேடிச் செல்க' என்று கூறினார். பருந்தோ அதனை ஏற்க மறுத்துவிட்டது.



சிபி பருந்திடம் 'அப்படியானால் புறாவிற்குப் பதிலாக வேறு உணவினை உனக்குத் தருகிறேன்' என்றார். அதனையும் பருந்து மறுத்தது. மன்னனுக்குக் குழப்பம் ஏற்பட்டது. எதைச் சொன்னாலும் மறுக்கின்றதே என்று நினைத்து, 'அந்தப் புறாவினுக்குப் பதிலாக எனது தசையைத் தரட்டுமா?' என்று கேட்கவும், 'எடைக்கு எடை தருவதானால் சம்மதம்' என்றது பருந்து.

மன்னர் தராசுத் தட்டினை எடுத்துவரச் சொன்னார். பின்பு தனது காலின் தொடைப் பகுதியிலுள்ள சதையினை வெட்டி எடுத்தார். தராசின் ஒரு தட்டில் புறாவினை வைத்து மறுதட்டில் தன் தசையினை வைக்கலானார். தராசில் தனது தசையின் எடை குறைந்து போனதால் மீண்டும் சிறிது தசையினை அறுத்து வைக்கலானார். தராசு முள் நேரானது. பின்பு, தட்டில் இருந்த தசைகளைப் பருந்துக்கு வழங்கினார்.

உடலில் இரத்தம் மிகுதியாக வெளியேறியது. புறாவோ மன்னனைப் பார்த்து உள்ளன்போடு நன்றி சொன்னது. மக்கள் தம் மன்னனின் செயலினைக் கண்டு கண்ணீர் வடித்தனர். புறாவிற்குப் பதிலாகத் தன் தசை யையே வழங்கிய வள்ளல் தன்மையைப் போற்றினர். சிபியின் கருணை உள்ளம் இப்போதும் எல்லாராலும் போற்றப்படுகிறது.

**கடையெழு வள்ளல்கள்**

காரி ஓரி பேகன்
பாரி நள்ளி ஆய்
அதியமான்

## செயல்பாடுகள்

**குழுவாகப் பிரிந்து கீழ்வரும் சொற்களுக்கு அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருள் கண்டு அருஞ்சொல்லட்டைத் தயாரித்து வெளியிடுங்கள்.**

உலாவுதல், அச்சம், அடைக்கலம், அருகில், எடை

மிகுதியாக, கருணை, வள்ளல், கொடை, போற்றுதல்

**“எனது உணவினை எங்கே மறைத்தாய்?” இதுபோல் நீங்களாகவே வினா வாக்கியங்கள் உருவாக்குங்கள்.**


______________________________

______________________________

______________________________

# உயிர்களிடத்து அன்பு வேணும்

பூனைக்குட்டிக்கு நல்ல தாகம். அது எங்கெங்கோ தேடிப்பார்த்தது. எங்குமே தண்ணீர் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு தோட்டத்திற்கு வந்தது. அதிர்ஷ்டவசமாக அங்கே ஒரு நீர்க் குழாய் இருந்தது. மிகவும் ஆர்வத்துடன் அந்த நீர்க் குழாயை நோக்கி ஓடியது பூனைக்குட்டி. நீர்க் குழாயின் மீது ஏறி திறப்பானைத் திருகியது. ஆனால் அந்தக் குழாயிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வரவில்லை.



தளர்வாக நடந்து சென்று கொண்டிருந்த பூனைக்குட்டி வழியில் ஒரு நாய்க்குட்டியைச் சந்தித்தது. 'இங்கே எங்காவது தண்ணீர் கிடைக்குமா அண்ணே?' என்று நாய்க்குட்டியைப் பார்த்துக் கேட்டது அது. 'கவலைப்படாதே தம்பி. புல் அறுப்பவர்களுக்காக அங்கே ஓர் இடத்தில் பானையில் தண்ணீர் வைத்திருப்பார்கள். பானையின் அடியில் தரையிலும் நீர் தேங்கி இருக்கும். நான் உன்னை அங்கே அழைத்துச் செல்கிறேன்' என்றது நாய்க்குட்டி.



என்ன சோதனை! அவ்வளவு தூரம் நடந்து சென்று பார்த்ததும் அங்கும் தண்ணீர் இல்லை. அப்போது அங்கே வந்த ஆட்டுக்குட்டியிடம் நாய்க்குட்டியும் பூனைக்குட்டியும் 'தண்ணீர் எங்கே கிடைக்கும்?' என்று கேட்டன. 'தொலைவில் ஒரு அம்மா துணி துவைப் பார்கள். அங்கு எப்போதும் தண்ணீர் கிடைக்கும். வாருங்கள் நான் அழைத்துச் செல்கிறேன்' என்றது ஆட்டுக்குட்டி.

அவை மூன்றும் நடந்து நடந்து களைப்படைந்தன. இறுதியில் ஆட்டுக்குட்டி

சொன்ன இடத்தை அடைந்தன. அந்த இடமும் முற்றிலும் வறண்டிருந்தது. தாகம் வாட்டியது. கொஞ்சமாவது தண்ணீர் குடித்தால்தான் சற்று தெம்பு வரும். அவை மூன்றும் இலக்கின்றி மீண்டும் நடந்து செல்லத் தொடங்கின. எங்காவது தண்ணீர் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையை மட்டும் கைவிடவில்லை.

ஓர் இடத்தில் மரம் ஒன்றில் நிறையக் குருவிகள் மிகவும் மகிழ்ச்சியாகக் கத்திக் கொண்டும் பறந்து கொண்டும் இருந்தன. பூனைக்குட்டியும் நாய்க்குட்டியும் ஆட்டுக்குட்டியும் அவற்றின் மகிழ்ச்சியைப் பார்த்து வியப்படைந்தன. 'ஏ, குருவிகளே, உங்களைப் பார்த்தால் மிகவும் சந்தோஷமாக இருப்பதுபோல் தோன்றுகிறதே, என்ன காரணம்?' என்று கேட்டது நாய்க்குட்டி.

"நாங்களெல்லாம் இப்போது தான் குளித்துவிட்டு வந்தோம். அதுதான் மகிழ்ச்சியாக இருக்கிறோம்'' என்றன குருவிகள். "எங்களுக்கு மிகவும் தாகமாக இருக்கிறது. நீங்கள் குளித்த இடத்தை எங்களுக்குக் கொஞ்சம் காட்ட முடியுமா?" என்று நாய்க்குட்டி பணிவுடன் கேட்டது. "அதற்கென்ன, இப்போதே போவோம் வாருங்கள்!" என்ற குருவிகள் மேலே பறந்தன. மூன்று குட்டிகளும் அவற்றைப் பின் தொடர்ந்து ஓடின.



அந்த இடத்தில் ஒரு வாயகன்ற மண் பாத்திரத்தில் நிறைய தண்ணீர் வைக்கப்பட்டிருந்தது. மூன்று குட்டிகளும் போதுமான அளவு நீர் பருகி மகிழ்ந்தன, பிறகு நாய்க்குட்டி, குருவியிடம் கேட்டது. "இங்கே தண்ணீர் வைத்தது யார்?'' குருவி பதில் சொன்னது. ''செல்வி என்னும் சிறுமிதான் எங்களுக்காகத் தினமும் இங்கே தண்ணீர் வைக்கிறாள். பிராணிகள் மீது மிகவும் அன்புகொண்டவள் அவள். மிகவும் நல்ல சிறுமி"

''அவளைப் பார்த்து நாங்கள் நன்றி சொல்ல வேண்டும்'' என்றது ஆட்டுக்குட்டி. குருவிகள் அழைத்துச் சென்றன. சற்று தூரத்திலேயே தோட்டத்தில் அமர்ந்திருந்தாள் செல்வி. தன்னை நோக்கி வரும் நாய்குட்டியையும், ஆட்டுக்குட்டியையும், பூனைக்குட்டியையும் பார்த்து மிகவும் மகிழ்ந்தாள். அவற்றை அன்புடன் அணைத்துக் கொண்டாள். மூன்றும் அவளைத் தொட்டு நன்றி தெரிவித்தன.

## செயல்பாடுகள்

- பூனை, நாய், ஆடு இவை பறவைக் கூட்டத்தைப் பார்க்கவில்லை என்றால் என்ன நேர்ந்திருக்கும்? ஒரு கதை எழுதுங்கள்.
- கதையை வகுப்பில் மௌன நடிப்பாக நடித்து மகிழுங்கள்.
- இக்கதையின் மையக்கருத்தைக் குழுக்களில் கலந்துரையாடுங்கள்; சொல்லுங்கள்.
- கீழ்க்காணும் படத்திற்குப் பொருத்தமான வேறொரு கதையைக் குழுவில் தயாரியுங்கள்.



## மயிலுக்குப் போர்வை

இயற்கை அழகினைக் கண்டுகண்டு - பெரும்
இன்ப மடைந்திடும் ஓர்அரசன்
உயர்ந்த மலைகளைக் கண்டிடவே - மிக
உல்லாச மாகக் கிளம்பினனே.

மலைவளம் கண்டு வருகையிலே - அங்கு
மடமட வென்று மழைபொழிய
பலகிளை உள்ள மரத்தடியில் - சென்று
பதுங்கினன் அந்த அரசனுமே.

பயத்தால் உடலும் நடுங்குதல்போல் - குளிர்
பரவிட மன்னன் நடுங்கினனே.
உயர்ந்த மதிப்புள்ள போர்வையினால் - நன்றாய்
உடம்பை இறுகவே மூடினனே.

மேகங்கள் கூடிடக் கண்டதுமே - அங்கு
வேகமாய் ஓர்மயில் ஓடிவந்தே,
தோகை விரித்துநின் றாடியதே - மேலும்
தொண்டையைத் தூக்கி அகவியதே!

"ஐயோ, குளிர்மிக வீசுவதால் - இந்த
ஆண்மயில் மேனி நடுங்குதம்மா!
'ஐயா, உதவுங்கள்' என்கிறதோ - மயில்?
ஆமாம், அதைத்தான் உரைக்கிறது."



எண்ணினன் இப்படி மன்னனுமே - உடன்
எடுத்தனன் போர்த்திய போர்வையினை.
சென்றனன் அந்த மயிலருகே - உள்ளம்
திருப்தி அடைந்திடப் போர்த்தினனே.

உடலும் மழையால் குளிர்ந்திடவே - அவன்
உள்ளம் கொடையால் குளிர்ந்ததுவே.
கொடையில் சிறந்தோன் பெயர்சொல்லவா? - மக்கள்
கொண்டாடும் பேகன் அவனல்லவா!

அழ. வள்ளியப்பா

## செயல்பாடுகள்

**நீங்கள் பிறருக்குச் செய்த உதவிகளைப் பட்டியலிடுங்கள்.**

நண்பனுக்குப் பேனா கொடுத்து உதவினேன்.
பேருந்தில் பெரியவருக்கு இருக்கை அளித்தேன்.

______________________________

______________________________

**இக்கதைப் பாடலைக் கதையாக எழுதுங்கள்.**

## நிறுத்தற்குறிகள்

வாசிக்கும்போது பொருளுக்கு ஏற்றபடி நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தியும் உணர்வுகள் வெளிப்பட வேண்டிய இடங்களில் அவற்றை வெளிப்படுத்தியும் வாசிக்க வேண்டும். இதற்குத் துணைபுரிவன நிறுத்தற் குறிகள். நிறுத்தற்குறிகளை உணர்ந்துபடித்தால் பொருளை உணர்வதில் தெளிவு ஏற்படும். படிப்பவர்களும் கேட்பவர்களும் பயன்பெறுவர்.

நிறுத்தற்குறிகள் பற்றிய விளக்கத்தை விரிவான நிலையில் காண்போம்.

## 1. முற்றுப்புள்ளி ( . ) (Fullstop)

வாக்கிய முடிவிலும் முகவரி இறுதியிலும் சொற்சுருக்கத்திலும் முற்றுப் புள்ளி இட வேண்டும்.

(எ.கா.) வாக்கிய முடிவில்

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

முகவரியின் இறுதி

முத்தையா புலவர்

முத்தமிழ்த்தெரு,

மூணாறு.

சொற்சுருக்கத்தில்

உ. வே. சாமிநாதன்.

உத்தமதானபுரம் என்பதன் சுருக்கம் 'உ'. வேங்கடராமய்யர் என்பதன் சுருக்கம் 'வே'. இவ்வாறு சொற்சுருக்கங்களின் பின் முற்றுப்புள்ளி வரும்.

## 2. கால்புள்ளி ( , ) (Coma)

பொருள்களை எண்ணும் இடங்களிலும்

அழைத்தலின் முன்னும்

வினையெச்சங்களுக்குப் பின்னும்

ஆதலால், ஆகவே முதலிய சொற்களுக்குப் பின்னும்

- கால்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ.கா.) கதைப் புத்தகம் இரண்டு, கவிதைப் புத்தகம் ஒன்று, துணுக்குப் புத்தகம் இரண்டு என ஐந்து புத்தகங்கள் வாங்கினான்.

கண்ணன் முருகனைப் பார்த்து, "நண்பா வா!" என்றான்.

மாணவன் ஓடிவந்து, புத்தகத்தை எடுத்து, ஐந்தாம் பாடத்தை எடுத்து, படிக்கத் தொடங்கினான்.

நேற்று பெருமழை பெய்தது. ஆதலால், முருகன் பள்ளிக்கு வரவில்லை.

### 3. வினாக்குறி ( ? ) (Question Mark)

வினாப்பொருளைத் தரும் வாக்கியத்தின் இறுதியில் வினாக்குறி இடுதல் வேண்டும்.

(எ.கா.) நீ தினமும் செய்தித்தாள் வாசிப்பதுண்டா?

### 4. வியப்புக்குறி ( ! ) (Exclamation Mark)

வியப்பு, அவலம் முதலான உணர்ச்சிகளைக் காட்டுகின்ற வாக்கியங் களுக்குப் பின்னும்

வரவேற்றல், வாழ்த்துதல், வைதல் ஆகிய பொருள்களைத் தெரிவிக்கின்ற வாக்கியங்களுக்குப் பின்னும்

– வியப்புக்குறி இடுதல் வேண்டும்.

(எ.கா.)

**வியப்பு**

1. ஆ! ஆ! இந்த மலை எவ்வளவு உயரம்?
2. ஆகா! சாப்பாடு மிகவும் பிரமாதம்!
3. என்னே! என்னே! பாரதப் பெருமை!

**அவலம்**

1. அந்தோ! பரிதாபம்!
2. அய்யோ! தாங்க முடியவில்லையே!

**வரவேற்பு**

1. வருக! வருக!

**வாழ்த்து**

1. வாழ்க! வாழ்க!

வைதல்

1. ஒழிக! ஒழிக.

## 5. அரைப்புள்ளி ( ; ) (Semicolon)

ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும்

ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும் எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும்.

– அரைப்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ.கா.) கம்பர் சடையப்பவள்ளலால் பேணப்பட்டார்; போற்றப்பட்டார்; ஊக்குவிக்கப்பட்டார்.

## 6. முக்காற்புள்ளி ( : ) (Colon)

உள் தலைப்பை அமைக்கும் போதும்

ஒருவர் கூற்றை விளக்கும் போதும்

– முக்காற்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ.கா.) மூவேந்தர் : சேரசோழபாண்டியர் ஆவர்.

## 7. ஒற்றை மேற்கோள் ( ‘ ’ )

ஒருவர் கூற்றை மற்றொருவர் எடுத்துச் சொல்லும்போது ஒற்றை மேற்கோள்குறி ( ‘ ’ ) இடுதல் வேண்டும்.

(எ.கா.) ‘நாளை வருவேன்’ என்று என்னிடம் சொன்னான். ‘அவனுக்காகத் தான் காத்திருக்கிறேன்’ என்றான் நண்பன்.

## 8. இரட்டை மேற்கோள் ( “ ” )

ஒருவர் கூற்றை அப்படியே குறிப்பிடும்போது இரட்டை மேற்கோள் (“ ”) அடையாளம் இடுதல் வேண்டும்.

(எ.கா.) “தேர்வு எப்படி எழுதினாய்?” நண்பன் கேட்டான். “நன்றாக எழுதியுள்ளேன்” என்று பதில் சொன்னேன்.

**நான் கற்றுக்கொண்டவை.**

| துணைக் கருத்துகள் | மிகநன்றாக | நன்றாக | ஓரளவு |
|---|---|---|---|
| பாடல் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லத் தெரிந்துகொண்டேன். | | | |
| நாட்குறிப்பு எழுதக் கற்றுக்கொண்டேன். | | | |
| அருஞ்சொல்லட்டை தயாரிக்கத் தெரிந்துகொண்டேன். | | | |
| கதைப் பாடலைக் கதையாக எழுதத் தெரியும். | | | |
| நிறுத்தற்குறிகள் பற்றித் தெரிந்துகொண்டேன். | | | |

# அகரமுதலி

| | |
|---|---|
| அக்கறை | ஆர்வம் |
| அசுத்தம் | தூய்மையின்மை |
| அனையார் | போன்றோர் |
| இடர் | துன்பம் |
| இழுக்கம் | பிழை, குறை |
| இன்னல் | துன்பம் |
| ஈக்கால் | ஈ யின் கால் |
| ஊர்தி | வாகனம் |
| என்னாம் | என்ன பயன் |
| கட்டிளம் | இளமை |
| கணுக்கள் | மூட்டு |
| கந்தை | கிழிந்த ஆடை |
| கன்னல் | கரும்பு |
| கஷ்டம் | வருத்தம் |
| கேலி | விளையாட்டுப் பேச்சு, பரிகாசம் |
| கோலம் | அழகு |
| சந்தேகம் | ஐயப்பாடு |
| சம்பளம் | ஊதியம் |
| சுலபம் | எளிமை |
| சுவையூட்டிகள் | ருசி கூட்டும் பொருள் |
| நன்செய் | வயல் |
| செல்வம் | செழிப்பு |
| சேய்மை | தொலைவு |
| தகவல் | செய்தி |
| திருநாள் | பண்டிகை |
| பகலவன் | சூரியன் |
| பஞ்சம் | ஐந்து, வறுமை |
| பிணிகள் | நோய்கள் |
| மாசு | அழுக்கு |
| யுத்தம் | போர் |
| வாசம் | வசித்தல், இருப்பிடம், மணம் |
| வீதி | தெரு, வழி |